4363

MADRAS LEGISLATIVE COUNCIL DEBATES

NINTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

17th to 22nd, 24th, 27th and 28th December 1956.

Volume XVII (Nos. 1 to 9).

TABLE OF CONTENTS

PAGES

Monday, the 17th December 1956.

I Expression of sorrow at the demise of Sri R. Madanagopala Naidu, a Member of the old Madras Legislative Council 1

II Condolence Resolution on the death of Sri T. M. Daivasikhamani Achariar, a former Member of the Madras Legislative Council 1-2

III Questions and Answers 2-5

IV Announcements by the Hon. Chairman—

(1) Nomination of two Members to the Business Advisory Committee 6

(2) Nomination of a Member to the Committee on Government Assurances 6

(3) Bill assented to by the President 6

(4) Decisions of the Business Advisory Committee ... 6-7

V Government Motions—

(1) Election of one Member to the State Library Committee 7

(2) Election of one Member to the Committee of Privileges 7-8

VI Presentation of the Budget for the year 1957-58 ... ... 8-10, 12-73

VII Papers laid on the table of the House 10-11

Tuesday, the 18th December 1956.

I Questions and Answers 75-80

II Adjournment Motion *re* the serious insecure situation created in the case of teachers handling Sanskrit, Arabic and Urdu in secondary schools by the passing of G.O. No. 1344, Education, dated the 12th July 1956 80-82

III General discussion on the Budget for the year 1957-58 ... 82-101

IV Papers laid on the table of the House 102

62707

PAGES

Wednesday, the 19th December 1956.

I Questions and Answers 103–108, 132–133

II Government Business—

(1) Presentation of the Second Supplementary Statement of Expenditure for the year 1956–57 108–110

(2) General discussion on the Budget for the year 1957–58—*cont.* 110–130

III Papers laid on the table of the House 131

Thursday, the 20th December 1956.

I Questions and Answers 135–143, 176–182

II Felicitations to Srimathi Mary C. Clubwala Jadhav, M.L.C., on her appointment as Sheriff of Madras 143–145

III Announcement by the Hon. Chairman *re* election of two Members to the Senate of the Annamalai University ... 145

IV General discussion on the Budget for the year 1957–58—*cont.* 145–175

V Papers laid on the table of the House 175

Friday, the 21st December 1956.

I Questions and Answers 183–185

II Announcements by the Hon. Chairman—

(1) Message from the Governor 185

(2) Messages from the Assembly 185–186

(3) Election of one Member to the State Library Committee 186

(4) Bills assented to by the President 186

III Government Resolution *re* raising the strength of the Madras Legislative Council to 63 186–191

IV Government Business—General discussion on the Budget for the year 1957–58—*cont.* (last day) 191–214

V Papers laid on the table of the House 215

Saturday, the 22nd December 1956.

I Questions and Answers 217–220, 273–274

II Announcement by the Hon. Chairman *re* messages from the Governor 220

III Government Motions—

(1) Motion under rule 23 (1) of the Council Rules *re* transaction of Government business on a non-official day (22nd December 1956) 220

(2) Election of one Member to the Board of Industries ... 222

(3) Amendments to the rules under section 40 (1) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Madras Act XXVI of 1948). 222–224

PAGES

IV Motion under rule 41 (1) of the Council Rules *re* strike of employees of the Government Stanley Hospital at Rayapuram 221

V Government Bills—

(1) The Madras Co-operative Societies (Amendment) Bill, 1956 (L.A. Bill No. 34 of 1956) 224–247, 274–278

(2) The Madras Requisitioning and Acquisition of Immovable Property Bill, 1956 (L.A. Bill No. 35 of 1956 ... ... 247–272, 279–289

VI Papers laid on the table of the House 272

Monday, the 24th December 1956.

I Question and Answers 291–295

II Announcements by the Hon. Chairman—

(1) Messages from the Assembly 295

(2) Election of one Member to the Committee of Privileges 295

III Government Business—General discussion on the Second Supplementary Statement of Expenditure for the year 1956–57 ... ... 296–325, 335–339

IV Government Bill—The Madras Inams (Assessment) Bill, 1956 (L.A. Bill No. 36 of 1956) 325–334

Thursday, the 27th December 1956.

I Questions and Answers 341–347, 374

II Announcements by the Hon. Chairman—

(1) Messages from the Governor 347

(2) Messages from the Assembly 347–348

(3) Election of one Member to the Board of Industries 348

III Government Bills—

(1) The Madras Appropriation (Vote on Account) Bill, 1956 (L.A. Bill No. 44 of 1956) 348–364, 375–377

(2) The Madras Appropriation (No. 6) Bill, 1956 (L.A. Bill No. 45 of 1956) 365, 378–379

(3) The Pudukkottai (Settlement of Inams) Second Amendment Bill, 1956 (L.A. Bill No. 37 of 1956). 365–366, 380

(4) The Madras Land Revenue (Surcharge) (Second Amendment, Bill, 1956 (L.A. Bill No. 38 of 1956) ... 366–367, 380–381

(5) The Madras General Sales Tax (Fourth Amendment) Bill, 1956 (L.A. Bill No, 39 of 1956) 367–373, 382

28th December 1956]

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir.

(*b*) An appeal against the acquittal of the accused has been filed in the High Court, Madras.

MR. CHAIRMAN : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ANNOUNCEMENTS BY THE HON. CHAIRMAN

(1) MESSAGE FROM THE GOVERNOR.

MR. CHAIRMAN : I have to announce to the House that I have received the following message, dated the 20th December 1956, from the Governor of Madras :—

" In pursuance of Article 207, clause (3) of the Constitution of India, I, A. J. John, Governor of Madras, hereby recommend to the Madras Legislative Council the consideration of the Madras Official Language Bill, 1956, as passed by the Madras Legislative Assembly."

(2) MESSAGE FROM THE ASSEMBLY.

MR. CHAIRMAN : I have also to announce to the House that I have received the following message from the Deputy Speaker, Madras Legislative Assembly, dated the 27th December 1956 :—

" In accordance with rule 114 of the Madras Assembly Rules, I transmit a copy of the Madras Official Language Bill, 1956 (L.A. Bill No. 46 of 1956), as passed by the Assembly on the 27th December 1956 and signed by me, for the concurrence of the Council."

III.—GOVERNMENT BILLS,

(1) THE MADRAS OFFICIAL LANGUAGE BILL, 1956 (L.A. BILL NO. 46 OF 1956).

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் தலைவர் அவர்களே, I move—

" That the Madras Official Language Bill, 1956 [1] (L.A. Bill No. 46 of 1956), as passed by the Legislative Assembly, be taken into consideration."

இந்த மசோதாவை இந்த சபைமுன் வெகு மகிழ்ச்சியுடன் சமர்ப் பிக்கிறேன். இந்த மசோதாவை இந்த சபைமுன் கொண்டுவரக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பற்றியே நாம் எல்லோரும் மகிழ்ச்சி அடையவேண்டும். தமிழ் மொழி நம்முடைய தாய் மொழியா கவும், நாட்டு மொழியாகவும் இருந்தாலும்கூட ஒரு காலத்திலே ஆட்சி மொழியாக இருந்திருந்தாலும்கூட, மத்திய காலத்திலே ஏற்பட்ட அடிமை வாழ்வின் காரணமாக அந்த மொழிக்கும் ஒரு அடிமை வாழ்வு ஏற்பட்டு விட்டது. அரசியாக வீற்றிருப்பதற்குப் பதிலாக பணிப்பெண்ணாக இருந்து பணியாற்றிவரக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. மறுபடியும் அந்த அரசு

[1] Printed as Appendix III on pages 434 and 435 infra.

rimaiyai நாம் தமிழ் அன்னைக்கு அளிக்கின்றோம் என்றால் நாம் மற்றத் துறைகளில் பெற்றிருக்கக்கூடிய சுதந்திரத்திற்கு இதுவும் ஒரு சின்னமாகவே அமைந்து இருக்கிறதென்று நான் தெரிவித்துக்கொள்ளு கிறேன். ஆகவே இன்றைக்குத் தமிழை அரசாங்க மொழி ஆக்கவேண்டு மென்று எடுத்து இருக்கக்கூடிய நம்முடைய முயற்சி மற்றத் துறைகளிலே நாம் எடுத்துக்கொண்டிருக்கும் முயற்சிகளுக்கு அனுசரணையாக இருக்கிறது என்பதை நாம் எல்லோரும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

இந்தத் தாய் மொழி வளர்ச்சிக்காக, தமிழ் வளர்ச்சிக்காகப் பல பெரியோர்கள் வெகு காலமாகப் போராடி வந்திருக்கிறார்கள். பலர் தங் களுடைய வாழ்க்கையையே இதற்குத் தத்தம் செய்திருக்கிறார்கள். அவர் கள் செய்த சேவையின் பலனைத்தான், முயற்சியின் பலனைத்தான், இன்றைக்கு நாம் இந்த நடவடிக்கையை எடுத்துக்கொள்ளக்கூடிய ஒரு கட்டத்தில் இருக்கின்றோம். ஆகவே அந்தப் பெரியோர்கள் எல்லோரு க்கும் நம்முடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளவேண்டி யது மிகவும் முக்கியம். ஆங்கிலம்தான் பேசவேண்டும், ஆங்கிலத்தில் பேசுவதுதான் கவுரவம் என்று நினைத்திருந்த காலத்தில், அதைத் தகர்த்தெறிந்த பல பெரியோர்கள் தமிழிலே பேசவேண்டும், தேச மக்க ளிடத்திலே சென்று தமிழில்தான் பேசவேண்டும் என்ற முறையிலே தமிழுக்கு ஒரு புதிய உயிரைக் கொடுப்பதற்கு முன்வந்தார்கள். அவர் களுடைய பெயரை எல்லாம் நான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அது இப்போது எற்பட்ட ஒரு நிகழ்ச்சி அல்ல. 50 வருஷங்களுக்கு முன்பு நமது நண்பர் ஸ்ரீ சக்கரைச் செட்டியார் அவர்கள் அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்தாரானே, எறக்குறைய அந்தக் காலத்திலிருந்தே தமிழுக்கு உரிய இடத்தை நாம் கொடுத்தாகவேண்டும் என்ற முயற்சி ஆரம்பிக்கப்பட்டு அது தொடர்ந்து நடந்து வந்திருக்கிறது. ஆகவே அந்த முயற்சிகளுக்கெல்லாம் ஒரு சிகரமாகவே இன்றைக்கு இந்த மசோதாவை நாம் நிறைவேற்ற முன்வந்திருக்கின்றோம். இந்த மசோதாவை நாம் நிறைவேற்றின உடனேயே எங்கு பார்த்தாலும் எல்லாத் துறைகளிலும், எல்லா விஷயங்களிலும் தமிழையே உபயோகப்படுத்த முடியும் என்று நினைத்துவிட முடியாது. அதில் இருக்கக்கூடிய கஷ்டங் களை முக்கியமாக இந்தச் சபையில் இருக்கின்ற அங்கத்தினர்கள் நன்றாக உணர்ந்திருக்கின்றார்கள் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை. இன் றைக்கு இந்த மசோதாவை நாம் நிறைவேற்றுவதன் மூலம் நமக்கு இருக்கக்கூடிய அவா பூர்த்தியாவதாக இருந்தாலும்கூட இன்னொரு பெரிய முயற்சிக்கு இதை ஆரம்பமாகவே நாம் வைத்துக்கொள்ள வேண்டி யிருக்கிறது. இனிமேல் இன்னும் தீவிரமாக முயற்சி செய்து தமிழை எல்லாத் துறைகளிலும் நாம் உபயோகப்படுத்துவதற்கு நாம் போதிய அளவு வளர்க்கவேண்டியது அவசியமாக இருக்கிறது. இந்த வளர்ச்சி நல்ல முறையிலே எற்பட்டால்தான் நாம் இன்றைக்கு நிறைவேற்றக்கூடிய சட்டம் நல்ல முறையிலே அமல் நடத்தப்பட்டு அதன் மூலமாக தேசத் திற்கும் மக்களுக்கும் நன்மை எற்படும். அந்த வளர்ச்சி நல்ல முறை யிலே எற்படாமல் போனால் இந்தச் சட்டம் இயற்றியும் பிரயோஜனம் இல்லாமல் போய்விடும். தமிழை வளர்க்கவேண்டும் என்று சொல்லும் இந்த சமயத்தில், தனித்தமிழில்தான் எல்லாப் பதங்களும் இருக்க வேண்டும் என்று ஒரு சிலர் நினைக்கின்றார்கள். வேறு மொழிப் பதங்கள் நம்முடைய மொழியிலே வந்து புகுந்துவிட்டால் நம்முடைய மொழிக்கு இழுக்கு வந்துவிடும் என்று நினைப்பவர்களும் இருக்கிறார்கள். அது உண்மையிலேயே வளர்ச்சிக்கு அறிகுறி அல்ல என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆங்கிலம் இன்று உலக மொழி யாக இருப்பதற்குத் தகுதி அடைந்திருக்கிறது என்று சொன்னால் அது எதோ பழைய ஆங்கிலமே தொடர்ந்து வந்த காரணத்தால் அல்ல. பழைய ஆங்கிலத்தை இப்பொழுது படிக்கவேண்டுமானால் அதற்கென்று தனி ஆசிரியர்கள் வேண்டும். எனென்றால் அவ்வளவு தூரம் ஆங்கில மொழி யானது இப்பொழுது மாறியிருக்கிறது. பழைய ஆங்கிலமும் ஆங்கிலம் தான்

28th December 1956] [Sri C. Subramaniam]

என்றாலும், இப்பொழுது அது வளர்ச்சி அடைந்திருக்கிறது. ஆனால், நம் முடைய தமிழ் அம்மாதிரி உரு மாறிப் போகாது. எந்தக் காலத்துத் தமிழை எடுத்துப் பார்த்தாலும் யாரும் அர்த்தம் புரிந்து கொள்ளக்கூடிய நிலைமையில்தான் அது இருந்துவருகிறது. இன்றைக்குத் தமிழ் வளம் பெறுவதற்கு, அதுவும் நவீனக் கருத்துக்களை வெளியிடக்கூடிய நிலை மையை அடைவதற்கு புதிய புதிய பதங்களை நாம் எடுத்துக்கொள்ள வேண்டியது மிகவும் முக்கியம். அதன் மூலமாகத்தான் வளர்ச்சி துரிதமாக ஏற்படும். அத்துடன் மொழிக்கும் ஒரு நல்ல வளம் ஏற்படும் என்று நான் நம்புகிறேன்.

இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையில், இந்தச் சட்டத்தை நாம் இயற்றும்போது நமக்குப் புதிய கடமைகள் ஏற்படுகின்றன என்பதை மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். தமிழை நல்ல முறையிலே வளர்ப் பதற்கும் எல்லாத் துறைகளிலும் கஷ்டம் இல்லாமல் அதை வழங்கச் செய்யமுடியும் என்ற நிலைமையை ஏற்படுத்துவதற்கும், நாம் எல்லா முயற்சிகளும் எடுத்துக்கொள்ளவேண்டியது மிகவும் முக்கியம். தமிழ்ப் பேச்சுக்களை சுருக்கெழுத்தில் எடுத்து, பிறகு அவைகளைப் செய் வதற்கு வேண்டிய முயற்சிகளும் எடுத்துக்கொள்ளவேண்டியது அவசி யமாக இருக்கிறது. இதையெல்லாம் செய்து முடிக்கவேண்டும் என்பது தான் சர்க்காருடைய லட்சியமாக இருக்கிறது. அதைத் துரிதமாக செய்து முடிக்கவேண்டும் என்பது சர்க்காருடைய லட்சியம். அதிலே இந்தச் சபை யினுடைய ஆதரவும், மக்களுடைய ஆதரவும், தமிழ் பெரும் புலவர் களுடைய ஆதரவும் இருந்து இந்தத் துறையிலே வெற்றி காண்பதற்கு எல்லோரும் ஒத்துழைக்கவேண்டும் என்று இந்தச் சட்டத்தை இங்கு பிரேரேபிக்கும்போது நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். இந்த மசோதாவை இங்கு நீங்கள் எல்லோரும் வரவேற்பீர்கள் என்பதில் எனக்கு எந்தவிதமான சந்தேகமும் இடையாது.

இதைச் செய்யும்போது இந்தத் துரையில் எந்த விதத்திலே வளர்ச் சிகள் ஏற்பட்டவேண்டும் என்பது பற்றி சர்ச்சைகளை ஆரம்பித்தால், அது தொடர்ந்து போய்க்கொண்டே இருக்கும். ஆகவே இன்றைக்கு இந்த விழாவை முடித்துவிட்டு அதற்கு மேல் செய்யவேண்டிய மற்ற காரியங் களைப்பற்றி தனியாக ஆலோசனை செய்து ஒரு முடிவு செய்யவேண்டியிருக் கிறது. நாம் என்ன செய்யவேண்டியிருக்கிறதென்பதைப் பற்றி குறிப் பிட்டிருக்கிறேன். அதை எப்படிச் செய்வது, எந்த முறையிலே செய்வது என்பதைப்பற்றியெல்லாம் தனியாக ஆலோசனை செய்து ஒரு முடிவுக்கு வரவேண்டும். ஆகையால் எந்தெந்த முறைகளைக் கையாளவேண்டும் என் பதுபற்றி இன்றைக்கு நாம் வாதப் பிரதிவாதங்கள் செய்துகொண்டிருக்க வேண்டியதில்லை. முடிசூட்டு விழாவை முடித்து, அதற்குப் பிறகு தனி யாக உட்கார்ந்து இந்த முயற்சிகளைப் பற்றிய நடவடிக்கைகளை எந்தெந்தத் துறையிலே எந்தெந்த முறையிலே எடுக்க வேண்டும் என்பது பற்றி நாம் சாவகாசமாகத் தீர்மானித்துக்கொள்ளலாம். அதற்கேற்ற நடவடிக் கைகளை நாம் எடுப்பதற்கு முயற்சி செய்யவேண்டும். இத்துடன் மகிழ்ச்சியுடனும், பெருமையுடனும் இந்த மசோதாவை இந்தச் சபைமுன் ஆலோசனைக்கு சமர்ப்பிக்கின்றேன். (ஆரவாரம்.)

MR. CHAIRMAN : Motion moved— 10-40 a.m.

"That the Madras Official Language Bill, 1956 (L.A. Bill No. 46 of 1956), as passed by the Legislative Assembly, be taken into consideration."

Now, I request hon. Members to make their speeches a bit short because I have got a list of a large number of Members who wish to participate in the discussion. I, therefore, request Members to restrict their speeches to five minutes each.

[28th December 1956

SRI V. CHAKKARAI CHETTY : அவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவிற்கு என்னுடைய ஆதரவைக் காட்டுவதற்காக இன்னுள் முதற்கொண்டு இந்த சட்ட சபையிலே நான் தமிழ் மொழியிலே பேசவேண்டுமென்று விரும்புகிறேன். (ஆரவாரம்.)

எனக்குத் தமிழிலே பேசிப் பழக்கம் உண்டு. ஆங்கிலத்திலே பேசினால் தான் பெருமை என்று நினைத்து சிலர் பேசுவார்கள். ஆனால் நான் அப்படிக் கிடையாது. எனக்கு ஆங்கிலம் பழக்கமாய்போய்விட்டது. ஆங்கிலத்திலே படித்துக் கல்லூரிகளிலும் பெரிய சபைகளிலும் வாதம் செய்யும் டிபேடிங் சொசைடிகளிலும் ஆங்கிலத்தில்தான் பேசுவது வழக்கமாய் போய்விட்டது. அந்தக் காலத்திலே இருந்த பெரிய ஆசிரியர்கள், தலைமை உபாத்தியாயர்கள், டாக்டர் மில்லர் முதலானவர்கள் எல்லாம் ஆங்கிலத்திலேயே பேசவேண்டும் என்று எங்களைத் தூண்டிவிட்டிருக்கிறார்கள். ஆகையால் ஆங்கிலத்திலே பேசிக்கொண்டிருந்தது பழக்கத்தினாலொழிய தமிழிலே பேசக்கூடாது என்பதனாலல்ல. சேந்தமிழும் நாப்பழக்கம் என்று சொல்லுவதுண்டு. அந்த மாதிரி தமிழில் பேசிப் பழகியிருந்தால் தமிழில் நன்றாகப் பேசலாம். தொழிலாளர்கள் ஸ்தாபனங்களில் நான் பிரசங்கம் செய்யும்போது அவர்கள்முன்பு நான் தமிழில் பேசுவது உண்டு. அவர்கள் முன்பாக நான் பைபிளை வாசித்துத் தமிழில் பிரசங்கம் செய்வேன். ஆகையால் தமிழ் மொழியில் பேசுவது எனக்கு நூதனம் அல்ல. இந்த மசோதா தமிழை ஆட்சி மொழியாக்குவதற்கும் தமிழை நன்றாக வளர்ப்பதற்கும் ஒரு ஆரம்பப் படியாக இருக்கிறது. ஆகையால், உச்ச ஸ்தானத்தை அடைந்துவிட்டோம் என்று பெருமைப்பட வேண்டிய அவசியம் இல்லை. இந்த நடவடிக்கை எடுத்திருப்பதன் காரணமாக ஆங்கிலத்தைக் கைவிடவேண்டும் என்று நான் சொல்லவே மாட்டேன். காரணம், ஆங்கிலம் அதிகமாக அவசியம் என்று என் மனதில் தோன்றுகிறது. தமிழ் மொழி ஜோதியாகப் பிரகாசிப்பதற்கும் அது தூண்டுகோலாக இருக்கும். ஆங்கிலத்தில் பெரிய காவியங்கள் எழுதிய மில்டன் போன்ற கவிகள் ஆங்கிலத்தையே படித்து அவைகளை எழுதவில்லை. அவர்கள் கிரேக்க பாஷையும் லத்தின் பாஷையும் கற்று அந்த ஞானத்தைக் கொண்டு ஆங்கிலக் காவியங்களை எழுதினார்கள். அப்படித் தான் " பாரடைஸ் லாஸ்ட் " என்ற காவியத்தை மில்டன் எழுதினார் என்பது ஆங்கிலம் படித்தவர்களுக்குத் தெரியும். ஆகவே, ஆங்கிலத்தைத் தூண்டுகோலாகக் கொண்டு தமிழ் மொழியை வளர்க்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஆங்கிலத்தின் மூலம் பல விஷயங்களை அறிந்துகொள்ள முடியும். ஒரு சிறு விஷயம் சொல்லுகிறேன். நான் வயதானாலும் கூட இப்போதும் ஆங்கிலத்தில் துப்பறியும் கதைகளைப் படிப்பது வழக்கம். துப்பறியும் கதைகள் தமிழில் அவ்வளவாக இல்லை. இனிமேல் தமிழாசிரியர்கள் தமிழ் நாட்டுச் சரித்திரத்தையொட்டியும் இந்நாட்டு நடைமுறைப் பழக்க வழக்கங்களை ஒட்டியும் அப்படிப்பட்ட கதைகளை எழுதினால் தமிழர்கள் அவைகளை வாசித்து இன்புறுவார்கள் என்பதில் சந்தேகமே இல்லை. ஆகையால் ஆங்கிலம் தூண்டுகோலாக இருந்து நமது முன்னேற்றத்திற்கு உதவியாக இருக்கும். ஆங்கிலத்தோடு போட்டி போட்டு ஆங்கிலத்தை வெல்ல வேண்டுமென்ற ஆசை உண்டாகவேண்டும். ஆகையால் தமிழர்கள் ஆங்கிலத்தை வெறுக்க வேண்டாம். ஆங்கிலம் இப்போது சர்வ தேச பாஷையாக இருக்கிறது.

என் உபாத்தியாயர் ஒருவர் இருந்தார். அவருக்கு சமஸ்கிருதம் பிடிக்காது. அதை வட மொழி என்று சொல்லுவார். தமிழ் மொழியைத் தென் மொழி என்பார். அவர் சொல்வார், " ஐயா, வட மொழி தமிழ் நாட்டிற்கு வந்தது. பல சொற்கள் வட மொழியிலிருந்து தமிழில் நுழைந்து விட்டன. அந்தச் சொற்களையும் நாம் தமிழாக்கி விட்டோம். உதாரணமாக பாஷையைப் பாடை என்று ஆக்கிவிட்டோம்." ஒரு பையனிடம் அவன் எந்த பாஷையை Second Language ஆக எடுத்துக் கொண்டிருக்கிறான் என்று கேட்பதற்கு அவனை அவர் " ஐயா, நீர் எந்தப் பாடையில் பேசுகிறீர் ? " என்று கேட்டார். அந்தப் பையன் இறுக்குப் பிடித்த பையன். " நீங்கள் போகிற பாடையில் தான் நானும் போகிறேன் " என்று அவன் பதில் சொன்னான்.

ஸ்ரீ சூரியநாராயண சாஸ்திரியார், மறைமலை அடிகள் முதலியவர்கள் எனக்குக் கிருஸ்தவக் கல்லூரியில் ஆசிரியர்களாக இருந்தனர். அந்தக் காலத்திலிருந்தே எனக்குத் தமிழிடம் அபிமானம் உண்டு. இருந்தாலும் நான் தமிழில் பேசாமல் இருந்ததற்குக் காரணம் தமிழில் நான் பேசுவது சாத்தியமில்லை என்பதல்ல; ஆனல் தருணம் இல்லாமல் போனது தான் காரணம்.

நான் அடிக்கடி தொழிலாளர்கள் முன்பாகப் பேசும்போது தமிழில் தான் பேசுவேன். அவர்களுக்கு ஆங்கிலம் தெரியாததால் அவர்களிடம் தமிழில் தான் பேசுவேன். தொழிலாளர்களுக்காகப் பிரசுரிக்கப்படும் "ஜனசக்தி" என்ற தமிழ் பத்திரிகையை நான் முழுவதும் வாசிப்பது உண்டு. தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படவேண்டிய சம்பளம், சலுகைகள் முதலியன பற்றி அந்தப் பத்திரிகையில் நன்றாக விவரித்து எழுதப்படுகிறது. ஆதலால், அந்தப் பத்திரிகையை நான் வாசிப்பது உண்டு. மற்றப் பத்திரிகைகளை வாசிக்கக்கூடாது என்பதற்காக அல்ல. அது தான் முக்கியமாக எனக்கு அனுசரணையான பத்திரிகையாக இருப்பதால் அதை வாசிப்பது உண்டு. நாம் தமிழில் பேச வேண்டும். தமிழில் ஆர்வத்தைக் காட்டுவதற்காகதமிழில் பேசித் தமிழ் மொழியை ஆதரிக்கவேண்டுமென்று நான் கேட்டுகொள்கிறேன்.

என் ஆசிரியர் சொல்லியிருக்கிறார் : "தமிழ் மொழி செந்தமிழ் நாட்டில் மதுரையில் பிறந்து இலங்கைக்குச் சென்றது." தமிழில் இலங்கை என்று சொல்வது இடையாது. தமிழில் அதை ஈழ நாடு என்று சொல்வது உண்டு. தமிழ் ஈழ நாட்டில் மாறியது. அதாவது, "ஏழைக் குழந்தை வாழைப்பழத்திற்காக அழுது அழுது கீழே விழுந்தது" என்ற வாக்கியம் ஈழ நாட்டிற்குச் சென்று அங்கே "ஏழைக் குளந்தை வாளைப் பளத்திற்காக அளுது அளுதுக் கீளே விளுந்தது" என்று உச்சரிக்கப் பட்டது. தமிழ் மொழி அம்மாளுக்கு இந்த மாதிரி பல் போய் விட்டது. ஆகவே அந்த அம்மாளுக்குப் பல் கட்டவேண்டியிருந்தது. கனம் அமைச்சர் அவர்கள் பல் கட்டிவிட்டார்கள். இனிமேல் தமிழ் மொழி செழித் தோங்கி வளரும் என்பதில் சந்தேகமே இல்லை. தமிழ் மக்களும் தமிழ் ஆசிரியர்களும் தமிழ் மொழியை ஆதரித்து வளர்ப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. 10-50 a.m.

இப்போது தமிழை நன்றாக வளர்ப்பதற்காக நாம் ஒரு சிறு விதையைப் போடுகிறோம். ஒரு "மஸ்டர்ட் ஸீட்" ஐப் போடுகிறோம். இந்தச் சிறு விதை பறவைகள் தங்கும் பெரிய ஆல மரமாகி அதன் கீழ் தமிழ் மக்கள் தங்கி சுகமாக இருக்க வேண்டும். இந்த மசோதாவை நான்முழு மனதுடன் ஆதரித்துக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

SRI T. M. NARAYANASWAMY PILLAI : கனம் தலைவர் அவர்களே, நான் முழுமனதுடனும் ரொம்ப மகிழ்ச்சியுடனும் இந்த மசோதாவை வரவேற்கிறேன். நமது மதிப்பிற்குரிய ஸ்ரீ சக்கரைச் செட்டியார் அவர்கள், நமது தமிழ் அன்னைக்குப் பல் போய் விட்டது என்று சொன்னார்கள். அப்படி இல்லை. இரண்டு காரணங்கள் சொல்கிறேன். மக்கள் தமிழை சரியாக ஆதரிக்காததால் பேச்சில் எதோ கொஞ்சம் குளறுபடி இருக்கலாம். இரண்டாவது, அன்னையை சிறையில் போட்டுவிட்டார்கள். ஆதலால், சுதந்திரம் இழந்து மக்களுடைய பேணுதலும் இல்லாமல் போனதால் அந்த அரசிக்கு என்ன உயர்வும் மேன்மையும் இருக்க வேண்டுமோ, அது இல்லாமல் போய் பல் போய்விட்ட மாதிரியும், கண்கள், காதுகள் போய்விட்ட மாதிரியும் நினைக்கும் தருணம் ஏற்பட்டது. ஆகையால் அந்தக் குறைகளையெல்லாம் நீக்கி மறுபடியும் அன்னை அரசுபுரியும் படியாகச் செய்வதற்கு இந்த மசோதா ஒரு நல்ல துணையாகவும், தூண்டுதலாகவும், உயிர் கொடுப்பதாகவும் இருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.

இந்த நேரத்தில் கனம் மந்திரி அவர்கள் சொன்னபடி ஒன்று ஞாபகம் வருகிறது. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் தமிழில் மிகவும் ஆர்வம் கொண்டவர்கள். அவர்கள் இந்த சந்தர்ப்பத்தில் மனம் பூரிப்

பார்கள். நமக்கு எதிரில் இருக்கும் கவிஞர் ஸ்ரீ. ராமலிங்கம் பிள்ளை அவர்களும் அப்படியே. அவர்கள், " இந்த நாட்டிலே பாலைவனங்கள் எல்லாம் சோலை வனங்களாக மாற வேண்டும். அந்தச் சோலை வனங்களில் பசுங்கிளிகள் இருந்து பாட வேண்டும். சபைகளிலே தமிழ் எழுந்து முழங்க வேண்டும்," என்று சொல்லியிருக்கிறார்கள்.

இப்போது நமது சர்க்கார் கொண்டுவந்திருக்கும் திட்டங்களின் மூலம் விவசாயத்தையும் தொழில்களையும் அபிவிருத்தி செய்கிறார்கள். அந்த அபிவிருத்தி மட்டும் போதாது. அந்த அபிவிருத்திக்கு அடிப்படையாகவும், ஆதரவாகவும் தமிழ் மொழி நன்றாக வளர வேண்டும். தமிழ் சபைகளில் எழுந்து முழங்க வேண்டும். இந்த சபை, காபினெட், செக்ரடேரியட் முதலிய இடங்களிலெல்லாம் தமிழ் முழங்க வேண்டும். இதைச் செய்தால் ஜனநாயகத்தில் மக்களுக்கு நல்ல பங்கு கிடைக்கும். மக்களுக்கு அரசாங்கத்துடன் நல்ல தொடர்பு ஏற்படும். அப்படிப்பட்ட தொடர்பு ஏற்படுவதால் அவர்களுக்கு உள்ள எழுச்சி ஏற்பட்டு அதன் வீலாவாக அரசாங்கத்தில் நல்ல பங்கெடுத்துக்கொள்வார்கள்; தங்கள் உரிமைகளை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்வார்கள்; கலையும் உயரும்.

இப்போது எப்படி இருக்கிறதென்றால் இங்கிலீஷ் மட்டும் படித்துத் தமிழ் படிக்காதவர்கள் சிலர் இருக்கிறார்கள். 90 சத விகிதத்திற்கு மேல் படிக்காமலே இருக்கிறார்கள். சில பேர் கொஞ்சம் படிக்கிறார்கள். ஆங்கிலமே படிப்பதில்லை. சர்க்கார் கொடுத்த செல்வாக்கினாலே ஆங்கிலம் படித்தவர்கள் உயர்ந்தவர்கள் என்றும் மற்றவர்கள் தாழ்ந்தவர்கள் என்றும் எண்ணம் ஏற்பட்டு, ஒருவருக்கொருவர் தொடர்பு வைத்துக் கொள்ளாமல் பிரிவு ஏற்பட்டுவிட்டது. அந்தப் பிரிவு இப்பொழுது போகிற காலம். இனி எல்லோரும் எழுந்திருந்து கலை, அறிவுத் துறைகள், ஞானத் துறைகள், அரசியல் துறைகள் இவைகளில் பூராவாகப் பங்கெடுத்துக்கொண்டு ஒருவருக்கொருவர் தன்னலம் இல்லாமல் உதவி செய்வதற்கும் அரசாங்கம் ஒரு பெரும் சாதனமாக இருக்கும், சாதகமாகவும் இருக்கும். மக்கள் அரசியல் அறிவு பெறுவதற்கும் தமிழ் ஆட்சி மொழியாக இருக்கவேண்டும். இல்லாவிட்டால் முடியாது.

இரண்டாவதாக, தமிழ் ஆட்சிமொழியாக வருவது தமிழ் மொழியின் வளர்ச்சிக்கே உதவியாக இருக்கும் என்று மந்திரி அவர்கள் சொன்னார்கள். அது ரொம்பவும் பொருத்தமாக இருக்கிறது. எந்த நாட்டுச் சரித்திரத்தைப் பார்த்தாலும் உண்மை அப்படித்தான் இருக்கிறது. அவர்கள் சொன்னதற்கேற்ப, சரித்திரத்திலே பார்க்கும்போது, முன்பு தமிழ் நன்றாக அரசு வீற்றிருந்தது என்று தெரிகிறது. அன்றைக்கு நன்றாக அதனுடைய பெருமை ஒளிவீசி இருந்ததற்குக் காரணம், அப்பொழுது நாடு அடிமைப்பட்டு இருக்கவில்லை. ஆட்சி மொழியும், மக்கள் மொழியும், வெவ்வேறாக இருக்கவில்லை. இரண்டும் ஒன்றாகத்தான் இருந்தது. என்? பெரிய அரசாங்கம் இல்லையா தமிழ் நாட்டிலே? நன்றாக அரசு புரியவில்லையா? அப்பொழுதெல்லாம் என்னென்ன அறிவு நூல்களையெல்லாம் நன்றாக வழங்கி இருக்கிறார்கள். அந்தக் காலத்தில் தமிழ் அம்மாதிரி வளர்ச்சி அடைந்திருந்தது. அந்தக் காலத்தில் தமிழ் நன்றாக வளர்ந்திருந்தது என்பதற்கு அத்தாட்சியாகச் சொல்லவேண்டுமானால் போப் இன்னும் இவரைப் போன்ற அனேகர் ஆங்கிலத்திலே படித்திருந்தாலும் தமிழிலும் அரிய நூல்களை இயற்றி இருக்கிறார்கள். இந்த மொழி சிறிய மொழியல்ல. குறுகிய மொழி அல்ல. காலப் போக்கிலே அதற்கு ஆதரவு குறைந்து ஓரளவு சக்தியை இழந்திருந்தபோதிலும், அதை இப்பொழுது பூர்த்தி பண்ண முடியாது என்று சொல்லமுடியாது. எந்த பாஷைகளிலிருந்தும் வார்த்தைகளை எடுத்துக்கொண்டு தமிழை விரிவுபடுத்தலாம் என்று சொல்லுகிறார்கள். பிற மொழிகளிலிருந்து வார்த்தைகளை தேவைப் படும்போது எடுத்துக் கொள்கிறவர்கள்கூட தமிழில் இருக்கும் சிறந்த வார்த்தைகளையும் தாராளமாகக் கையாண்டு மொழியை வளர்ச்சி அடையச் செய்யலாம். மொழி வளர்ச்சியுறுவது மிகவும் முக்கியமானது. மொழி வளர்ந்தால்தான் மக்களுடைய திறமை

நன்முக உயரும் என்பதில் சந்தேகம் இல்லை. மக்களுடைய திறனை ஒரு விதத்திலே நோக்கிப் பார்த்தால் இது முக்கியமாக இருக்கிறது. மற்ற பாஷைக்கும் இந்த பாஷைக்கும் என்ன நோக்கம் இருக்கவேண்டும் என்று பார்க்கும்போது, தமிழனுக்கு ஏதோ அடிமை காலத்தில் குறுகிய மனப் பான்மை வந்து, தன் பாஷையும் சிறைப்பட்டு இருந்தபோது எதைப்பார்த் தாலும் பயப்பட்டிருக்கலாம். எதையும் விரோதமாக பாவிக்கும்படியான ஒரு சந்தர்ப்பம் இருந்திருக்கலாம். உண்மையிலேயே அப்படி அல்ல. வாஸ்தவத்திலேயே எப்பொழுது நமக்கு விடுதலை நீங்கி தனியாக விடுதலை யான உணர்ச்சி, சுயராஜ்யம் என்ற உணர்ச்சி ஏற்பட்டதோ அப்பொழுது எல்லாவற்றையும் வரவேற்கவேண்டும். அப்படித்தான் தமிழ் நாட்டு சரித் திரம் இருக்கிறது. ஒன்றையும் விலக்கவில்லை. எனது சொந்த அனுப வத்தில் ஆங்கில பாஷையையும், சமஸ்கிருத பாஷையையும் நான் ஏற் றுக்கொள்ளுகிறேன். என்னுடைய நண்பர்களில் அனேகர் என்னைக் கேட்ட போது நான் அப்படித்தான் சொன்னேன். என்னுடைய எண்ணம் அப்படி த்தான் இருக்கிறது. எப்பொழுது தமிழ் விரிந்தது என்று பார்த்தால் தமிழ் சங்கம் வந்ததற்குப் பிறகுதான். எந்த பாஷையும் இன்னொரு பாஷைக்கு அடிமை என்று சொல்ல முடியாது. ஒரு பாஷை ஆட்சி மொழியாக வந்துவிட்டால் மற்ற பாஷைகள் மறைந்துபோகவேண்டும் என்று நான் சொல்லமாட்டேன். எந்த பாஷையில் நல்லது இருந்தாலும், சமஸ்கிருதத்தில் ஆகட்டும், ஆங்கிலத்தில் ஆகட்டும், நல்லது எது இருந் தாலும் அதை எடுத்துக்கொண்டு அதை நம்முடையதாக்கிக்கொள்ள வேண்டும். நம்முடைய ரத்தத்திலே அதையும் சேர்த்துக்கொள்ளவேண் டும். தமிழனுடைய வளர்ச்சி பெருக வேண்டுமானால் நல்ல ஆட்சி இருக்கவேண்டும், சுதந்திரம் இருக்கவேண்டும். எந்த ஒரு பாஷையை யும் புறக்கணிக்கவேண்டியதில்லை.

11 a.m.

பாரதியார் என்ன சொல்லியிருக்கிறார் என்றால் எட்டு திக்கும் சென்று கலைச் செல்வங்களைக் கொண்டுவந்து சேர்க்கவேண்டும் என்று சொல்லி யிருக்கிறார். தமிழ் எவ்வளவோ சிறப்பான மொழியாக இருந்தபோதி லும், புதிய கலைச்சொற்கள் அதில் இல்லையே என்று பயப்படவேண்டாம் என்று அவர் கூறி இருக்கிறார். புத்தம் புதிய கலைகளும், பஞ்சபூத செயல் களின் நுட்பங்களும் கூறும் கலைகளும் மேற்கே வளருவதாகவும் கூறி அவைகளை எல்லாம் நம் தமிழிலே வந்துவிடவேண்டும் என்று விரும்பினார். ஆகவே இந்தக் காலத்திலே தமிழிலே கலைச்சொற்கள் அதிகமாக வேண்டு மானால் நாம் சர்வதேச பாஷையாகிய ஆங்கிலத்தில் உள்ள கலைச்சொற்களை தமிழில் எடுத்துக்கொண்டு விஞ்ஞானத் துறையில் முன்னேறவேண்டும். இதனால் ஒரு பாஷை உயர்வு இன்னொரு பாஷை தாழ்வு என்பது கிடை யாது. இப்படி ஆரம்பித்தால் சிறந்த கலைகளை உண்டாக்க முடியும். தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு வேண்டிய புதிய வாய்க்காலைவெட்டிப் பயிர்களை உண்டாக்க வழி தேடவேண்டும். அப்பொழுது ஆங்கிலம், சமஸ் கிருதம் போன்ற மொழிகளினுடைய உதவியும் கட்டாயம் வேண்டும். நமக்கு சுதந்திரம் கிடைத்துவிட்டது, தமிழ் ஆட்சி மொழியாகிவிட்டது என்று அந்த பாஷைகளை புறக்கணிக்கக்கூடாது. அவைகளுக்கு அடி மையாகவும் இருக்கவேண்டாம். ஒரு நூலில் உள்ள அறிவு ஒருவனுடைய சொத்தல்ல. சர்வ மனிதர்களுடைய சொத்தாகும். நம்முடைய மக்கள் பண்பு உயர்ந்து நன்முக அவர்கள் இதில் பாடுபடும்படியாக உதவவேண் டும். தனித்தமிழ் என்பதைப்பற்றி ஸ்ரீ ராமலிங்கம் பிள்ளை அவர்கள் எழுதியிருக்கிறார்கள். ஸ்ரீ சோமசுந்தர பாரதியார் இதைப்பற்றி எழுதி யிருக்கிறார்கள். இந்தப் பிளவுக்கு இடம் கொடுக்கவேண்டாம். காவிரி யில் எது எதுவோ வந்து சேர்ந்தாலும்கூட புனிதமாகப் போய்விடுகிறது. இதில் சந்தேகம் வேண்டாம். முதலில் கரடுமுரடாக இருக்கும்போது சில கஷ்டங்கள் ஏற்படலாம்; கடைசியில் பார்க்கும்போது நன்முகத் தெளிந்து விடும். தனித் தமிழாக இருக்க முடியாது. தமிழ் நாடு மட்டும் தனியாக இருக்க முடியுமா? பழைய காலத்தில் இருந்து நம்மிடையே மாறுபாடு கள் காணப்படுகின்றன. உணவிலும் உடையிலும்கூட மாறுதலைக் காண்கிறோம். காலப்போக்கில் அனேக விஷயங்களை நம்முடையதாக்கிக்

கொண்டிருக்கிறோம். இது வேண்டாம், அது வேண்டாம் என்று ஒதுக்கிக்கொண்டே இருந்தால், நம்முடைய மொழியில் உள்ள வார்த்தைகளைக் கொண்டேதான் எல்லாக் காரியத்தையும் சாதித்துக்கொள்ளவேண்டும் என்று சொன்னால் கடைசியில் நாம் முன்னேற முடியாமல் அடிமைப்பட்டுக் கொண்டே இருக்க வேண்டியதாகிவிடும். நாம் அடிமைகள் அல்ல, விடுதலை பெற்ற மக்கள், வீரம் உள்ள மக்கள் என்ற முறையில் தாராளமாக நாம் முன்னேக்கிப் போகவேண்டும். நாம் வெகு வேகமாக பல மொழிகளில் உள்ள நல்லவைகளையெல்லாம் நம்முடையதாக்கிக்கொண்டு முன்னேறினால் வேற்றுமைகளெல்லாம் மறைந்தொழிந்துவிடும். மற்ற பாஷைகளில் இருந்து ஒன்றையும் எடுத்துக் கொள்ளாமல், அவைகளைப் புறக்கணித்துவிட்டு, தனித்தமிழே இருக்கவேண்டும் என்ற ஒரு பெரும் வெறி நோக்கம் இல்லாமல், குறுகிய மனப்பான்மை இல்லாமல் இதைக் கைக்கொண்டோமானால், கட்டாயம் அரசாங்கத்திற்கும், மக்களுக்கும் நல்ல தொடர்பு ஏற்பட்டு, தமிழனுக்கு இருக்கக்கூடிய பண்புகளெல்லாம் மேலும் வளர்ந்து உலகத்திற்கே வழிகாட்டியாக விளங்கும் என்பதில் சந்தேகம் இல்லை. இதைக் கொண்டுவந்ததற்காக சர்க்காருக்கும், கனம் மந்திரி ஸ்ரீ சுப்பிரமணியம் அவர்களுக்கும் மக்கள் சார்பாக வாழ்த்துக் கூறி அவர்களைப் பாராட்டி நான் அமருகிறேன்.

* SRI T. PURUSHOTHAM : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஆட்சிமொழி மசோதாவை, . . .

SRI K. BALASUBRAMANYA AYYAR : அவைத்தலைவர் அவர்களே என்று சொல்வதுதான் பொருத்தம்.

* SRI T. PURUSHOTHAM : நானும் இந்த மசோதாவை வரவேற்கிறேன். இந்த மசோதாவைக் கொண்டுவந்ததற்காக சர்க்காரையும் அமைச்சர் அவர்களையும் நான் மிகவும் பாராட்டுகிறேன். இந்த மசோதாவிற்கு யாருக்கும் எவ்விதமான ஆட்சேபணையும் இல்லையென்று நான் திட்டமாகத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். எல்லோரும் இதை சந்தோஷத்துடன் ஒப்புக் கொள்ளுவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. இந்த மசோதா முக்கியமாக அமலுக்கு வந்த உடனே தாலுக்கா ஆபீசுகளிலே எல்லாம் தமிழையே அரசாங்க பாஷையாக உபயோகப்படுத்துவதற்கு வேண்டிய நோட்டிபிகேஷன் போடுவதாக நமக்கு இந்த மசோதாவிலிருந்து தெரிகிறது. ஜில்லா ரெவின்யூ நிர்வாக விசாரணைக் கமிட்டியார் யோசித்து, தாலுகா ஆபீஸ்களில் எல்லாம் தமிழில் நிர்வாகம் நடத்தலாம் என்று சிபாரிசு செய்ததன் பேரில் இந்த மசோதாவை அரசாங்கத்தார் கொண்டுவந்திருக்கிறார்கள். இந்த சமயத்தில் நான் சர்க்காருக்கு ஒன்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதாவது, கமிட்டியினர் தெரிவித்திருக்கும் அபிப்பிராயங்களையெல்லாம் அரசாங்கத்தார் நன்றாக ஆராய்ச்சி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். காரணம், **Revenue adjudication** சம்பந்தமாக அவர்கள் சில விஷயங்களைச் சொல்லி இருக்கிறார்கள். **Legal precision** இருக்க வேண்டுமானால் இனிமேலும் நமது கோர்ட்டுகளில் நடவடிக்கைகள் ஆங்கிலத்திலேயே இருக்கப் போவதன் காரணமாக, கோர்ட்டு நடவடிக்கைகள் தமிழில் நடத்தப்படும் வரையில் ரெவின்யூ உத்தரவுகள் எல்லாம் ஆங்கிலத்திலேயே இருக்க வேண்டும் என்று கமிட்டியார் தெரிவித்திருக்கிறார்கள். இது ஒரு முக்கியமான விஷயம். இதை அரசாங்கத்தார் கவனிக்கவேண்டும். அந்த உத்தரவுகள் எல்லாம் பொது மக்களுக்குத் தமிழிலேயே கிடைக்கச் செய்வதற்காக மசோதாவின் 4-வது பிரிவின் பிரகாரம் அறிக்கைகள் போட்டு பொது மக்களுக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அடுத்தபடியாக, தாலுகா ஆபீஸ்களுக்குப் போடப்படும் இந்தச் சட்டத்தை உடனடியாகவே எல்லா ஜில்லா போர்டுகளுக்கும், முனிசிபாலிடிகளுக்கும், பஞ்சாயத்துக்களுக்கும், சென்னைக் கார்ப்பரேஷனுக்கும் விஸ்தரித்து அந்த இடங்களிலும் தமிழில் நிர்வாகம் நடத்துவதற்கு அறிக்கை (நோடிபிகேஷன்) போட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த ஜனநாயக ஆட்சியில்

ஜனநாயக ஸ்தாபனங்களாகிய கார்ப்பரேஷன், ஜில்லா போர்டுகள், முனிசி பாலிடிகள், பஞ்சாயத்துக்கள் முதலியன நன்முக நடக்கவேண்டுமானால், பொது மக்களுக்குப் பயன்படுமாறு அந்த ஸ்தாபனங்கள் நடக்க வேண்டு மானால், எப்போது தாலூகா ஆபீஸ்களில் தமிழ் நிர்வாகம் நடக்க வேண்டு மென்று உத்திரவு போடப்போகிறோமோ அப்போதே இந்த ஸ்தாபனங் களிலும் தமிழ் நிர்வாகத்தை உடனடியாகக் கொண்டுவரவேண்டும் என்று நான் அரசாங்கத்தாரை வேண்டிக்கொள்ளுகிறேன். காரணம், 4-வதுபிரிவில் நன்முகத் தெரிவிக்கப்படுகிறது. **Official purposes**-க்காகத் தேவைப்படும் போது தமிழை உபயோகிக்க வேண்டும் என்று அறிக்கை போடலாம் என்று இந்தப் பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் என்னுடைய இந்த முக்கியமான கோரிக்கையை நிறைவேற்றவேண்டும் என்று கனம் அமைச் சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். நிறைவேற்றுவார்கள் என்றும் நம்புகிறேன்.

மறுபடியும் கனம் அமைச்சர்களையும் சர்க்காரையும் இந்த மசோதா வைக் கொண்டுவந்ததற்காகப் பாராட்டுகிறேன். நான் தெரிவித்த விஷயங் களையெல்லாம் அரசாங்கத்தார் கவனிக்கவேண்டும் என்று சொல்லிக் கொண்டு இந்த மசோதாவிற்கு என்னுடைய ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கனம் சபாநாயகர் அவர்களே, நாம் மறுபடியும் கூடுவதற்கு இன்னும் ஆறு மாதங்கள் இருக்கின்றன. அதற்குள் தாங்களும் ஒரு தமிழாசிரி யரின் மூலம் தமிழ் கற்றுக் கொண்டு விடுவீர்கள் என்று நினைக்கிறேன். (குறுக்கீடு.) "கற்றுக்கொள்கிறேன்." என்று கனம் சபாநாயகர் அவர்கள் வாக்குறுதியளித்திருக்கிறார்கள். இனிமேல் அறிக்கை வெளியிட்டு நாமும் சட்டசபையில் தமிழிலேயே நடவடிக்கைகளை நடத்தலாம் என்று நினைக்கி றேன். வணக்கம்.

Sri V. RAMALINGAM PILLAI: கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய மந்திரி சபையினர் பல நல்ல காரியங்களைச் சாதித்திருக்கிறார் கள். பாமர மக்கள் பாராட்டக்கூடிய பல நல்ல காரியங்களை அவர்கள் சாதித்திருப்பதற்காக நாம் எல்லோரும் அவர்களை மனமார வாழ்த்த வேண்டும். இந்த நல்ல காரியங்களுக் கெல்லாம் முத்தாய்ப்பாக தமிழ் ஆட்சி மொழியாக ஆவது பாராட்டத் தகுந்த விஷயம். கடந்த 700 ஆண்டுகளாகத் தமிழ் புறக்கணிக்கப்பட்டு வந்திருக்கிறது. நாம் தமிழ் பண்புகளை வளர்க்க வேண்டும். ஆட்சி மொழி மாறுவது சரித்திரப் பிரசித்தி பெற்ற காரியம். 11-10 a.m.

இனிமேல் தமிழ் படிப்பு எவ்வளவு வளரும் என்பதைப் பற்றி நாம் சிந்தனை செய்ய வேண்டும். நெடுங்காலமாக தமிழ் பண்புகள் நம்மிடையே இல்லாமல் இருந்திருக்கிறது.

தமிழ் மொழிக்கும் வட மொழிக்கும் ரொம்பப் பேதம் உண்டு. தமிழ் இலக்கியங்களுக்கும் வட மொழி இலக்கியங்களுக்கும் ரொம்பப் பேதம் உண்டு. வட மொழியை '**classical language**' என்று சொல்வார்கள்; தமிழையும் '**classical language**' என்று சொல்வார்கள். வட மொழி யிலுள்ள மெய்ஞானம் முழுவதும் தமிழில் இருக்கிறது. ஆனால் தமிழ் மொழிதான் உலக மெய்ஞானத்திற்கு ஆதரவானது.

தமிழ் மொழிக்கும் வட மொழிக்கும் பல வேறுபாடுகள் உண்டு. வட மொழியில் வேதங்களுக்குச் செய்யப்பட்டுள்ள வியாக்கியானங்களுக்கும் தமிழ் மொழியில் வேதங்களுக்குச் செய்யப்பட்டுள்ள வியாக்கியானங்களுக்கும் எவ்வளவு வித்தியாசம் உண்டோ, அவ்வளவு வித்தியாசம் வட மொழிப் பண்புகளுக்கும் தமிழ் பண்புகளுக்கும் உண்டு. வட மொழியிலுள்ள மெய்ஞானம் முழுவதும் தமிழிலும் வந்திருக்கிறது. ஆனால் வட மொழியிலுள்ள மெய்ஞானத்தைத் தமிழர்கள் தங்கள் தமிழ் மொழியில்தான் சொல்லியிருக்கிறார்கள். வட மொழிப் பண்புகளின்படி தெய்வம் நம்பப்படுகிறது. தமிழர்களும் தெய்வத்தை நம்புகிறார்கள். வட மொழிப் பண்புகளைப் பின்பற்றுபவர்களும் தமிழ் பண்புகளைப்

பின்பற்றுபவர்களும் மெய்ஞானத்தை அடைய முயற்சிக்கிறார்கள். அப்போது வட மொழிப் பண்புகளின்படி ஒருவன் சந்நியாசியாக மாறுகிறான். ஆனால் தமிழ் பண்பின்படி சந்நியாசியாக மாற வேண்டிய தில்லை.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுரையும்
தெய்வத்துள் வைக்கப்படும்."

என்று திருக்குறளில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே சந்நியாசம் வாங்குவதைக் காட்டிலும் இல்லறம் சிறந்தது என்பது தமிழ் பண்பு.

இலக்கியங்களில் மட்டுமின்றி இலக்கணங்களிலும் தமிழுக்கும் மற்ற மொழிகளுக்கும் வித்தியாசங்கள் உண்டு. உயிர் எழுத்து, மெய் எழுத்து என்ற இரு வகை எழுத்துக்கள் இருக்கின்றன. உயிர் என்பது மூச்சு, மெய் என்பது உடல். தமிழிலும் உயிர் எழுத்துக்கள் இருக்கின்றன. மற்ற மொழிகளிலும் உயிர் எழுத்துக்கள் இருக்கின்றன. ஆங்கிலத்தில் **a, e, i, o, u** என்ற உயிர் எழுத்துக்கள் இருக்கின்றன. தமிழ் உயிர் எழுத்துக்களுக்கும் வட மொழி உயிர் எழுத்துக்களுக்கும் வித்தியாசம் உண்டு. வட மொழியை நான் வணங்குபவன்; வெறுப்பவன் அல்ல, ஆகவே வித்தியாசத்தை மட்டும் சொல்கிறேன். வட மொழியிலுள்ள உயிர் எழுத்துக்களை எடுத்துக் கொண்டால், அவற்றில் உயிர் மட்டும் பேசும், அ, ஆ, இ, ஈ, உ, ஊ முதலிய வட மொழி உயிர் எழுத்துக்களில் உயிர் மட்டும் பேசும். வட மொழிக்கும் தமிழ் மொழிக்கும் உயிர் எழுத்துக்களில் வேறு என்ன வித்தியாசம் இருக்கிறது? ரு, அம், அ ஆகிய மூன்றும் வட மொழியில் உயிர் எழுத்துக்களாக இருக்கின்றன.

வட மொழியில் தேர்ந்த ஒரு புலவர் தமிழ் மொழியை இயற்றியிருக்கிறார் என்று நான் சொல்கிறேன். ஆனால் தமிழ் பண்புகள் வேறு, வட மொழியிலுள்ள மெய் ஞானத்தையெல்லாம் வடித்தெடுத்தது தமிழ். வட மொழியிலுள்ள சத்தான விஷயங்களெல்லாம் வடித்தெடுக்கப்பட்டு தமிழில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. வடமொழியிலிருந்து உலகவாழ்க்கைக்கு அவசியமான விஷயங்களெல்லாம் வடித்தெடுக்கப்பட்ட தமிழ் மொழி இலக்கியங்கள் வட மொழி இலக்கியங்களின் பிரதியாகவே இருக்கின்றன. ஆனாலும் தமிழ் பண்பு என்பது வேறுகவே இருக்கிறது. தமிழ் பண்பு மற்றப் பண்புகளை விட வேறுகவே இருக்கிறது. தமிழ் பண்புகள் வளருவதற்காக அவைகளை எங்கும் இளைஞர்களுக்கு போதனை செய்கிறார்கள். "அறஞ் செய விரும்பு, ஆறுவது சினம், இயல்வது கரவேல், கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம், ஆலயம் தொழுவது சாலவும் நன்று" போன்றவைகளை ஆரம்பத்திலேயே பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்கக்கூடிய இந்தப் பண்புகள் எல்லாம் தமிழ் நாட்டில் நாம் அறிந்ததே. தமிழன் நெடுங்கணக்கு, பெருங்கணக்கு, இவைகளைக் கற்பதன் மூலம் தமிழ் பண்புகளெல்லாம் வளரும். எல்லாக் கலைகளையும் தமிழிலேயே போதிக்கக்கூடிய நிலை வர வேண்டும் என்பதற்கு நம்முடைய கல்வி மந்திரி அவர்கள் முத்தாய்ப்பாக, ஆரம்பமாக இந்த மசோதாவைக் கொண்டுவந்ததற்காக நாம் அவரை மிகவும் பாராட்டவேண்டும்.

இது காலம் கடந்ததென்றும், தேர்தலுக்காகச் செய்யப்பட்ட தென்றும் சொல்லப்பட்டது. நல்ல காரியத்தை எப்பொழுது செய்தால் என்ன? அரசாங்கத்தின் நடவடிக்கை ஜனநாயக சூழ்நிலையைக் கொண்டதல்லாமல் அரசாங்கத்தாருடைய விருப்பம் இல்லாமை அல்ல. ஆகையால்தான் எவ்வளவு துரிதமாகச் செய்யவேண்டுமென்று எண்ணுகிறோமோ அவ்வளவு துரிதமாக ஜனநாயக முறையிலே செய்துவிட முடியாது. இப்பொழுதாவது அவர்கள் செய்ததைப் பாராட்டுகிறேன், இன்னும் இதையொட்டி தமிழிலேயே கல்வி போதிக்கவேண்டும் என்பதும், தமிழிலேயே எல்லாக் கலைகளும் வளரவேண்டும் என்பதும் பின்னால் வரவேண்டும். அப்படியெல்லாம் வந்து, தமிழுக்கு பெருமை தரக்கூடிய காலம் வந்து, நம்முடைய மந்திரி அவர்கள் மீண்டும் இந்த சபைக்கு வந்து, அவர்கள் எண்ணி இருக்கின்ற காரியங்களெல்லாம் கைகூடவேண்டும் என்று ஆண்டவனைப் பிராத்தித்து தமிழ்த் தாயின் பேரால் அவர்களை வாழ்த்துகின்றேன்.

28th December 1956]

SRI V. S. BALASUNDARAM : கனம் அவைத்தலைவர் அவர்களே, இந்த மந்திரி சபையையும், குறிப்பாக கனம் ஸ்ரீ சுப்ரமணியம் அவர்களையும் மிகவும் பாராட்ட வேண்டும். பல வருஷங்களாகப் பேச்சாளர்கள் வெளியிலே பேசும்போது தமிழிலேயே ஆட்சி நடக்க வேண்டும், தமிழானது சீர்குலைந்த நிலையில் இருக்கிறது. தமிழுக்கு அரசாங்கம் ஒன்றும் செய்யவில்லை என்றெல்லாம் சொல்வதைக் கேட்டு வந்திருக்கிறோம். ஆனால், உண்மையாகவே, எந்த அரசாங்கமாவது தமிழுக்குப் பணி செய்திருக்கிறதா என்றால் அது காங்கிரஸ் அரசாங்கம் தான் என்று சொல்வது மிகையாகாது. சுமார் 10 வருஷங்களுக்கு முன்பே ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் மந்திரி சபையை அமைத்தபோது உயர்நிலைப் பள்ளிக்கூடங்களிலே தமிழ் மூலமாகவே எல்லாப் பாடங்களும் கற்றுக் கொடுக்கவேண்டுமென்று அவர்கள் ஏற்பாடு செய்தபோது ஆங்காங்கே ரொம்பக் கலவரம் ஏற்பட்டது. சில உபாத்தியாயர்கள் மற்றப் பாடங்களைத் தமிழிலே போதிக்க முடியாது என்றே சொல்லிக்கொண்டிருந்தார்கள். ஏனென்றால், அவர்கள் எல்லோரும் ஆங்கிலத்திலே கல்வி பயின்றவர்கள். ஆங்கிலத்திலே போதிக்க வல்லவர்கள். அதனால் தமிழிலே எல்லாப் பாடங்களையும் போதிக்க முடியாது என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். ஆனால் அப்பொழுது இருந்த நமது காங்கிரஸ் மந்திரி சபை மிகவும் தைரியமாக அதை அமலுக்குக் கொண்டு வந்தார்கள். இப்போது என்ன பார்க்கிறோம் என்றால், ரொம்ப சிறப்பாக, அழகாக, விமரிசையாக, தமிழ் பாஷையிலே பாடம் போதிக்கப்பட்டிருக்கிற பள்ளிக்கூடங்களிலே, இதை நன்றாகத் தெரிந்து கொள்ளுகிறார்கள். எஸ்.எஸ்.எல்.வி. பரீக்ஷையிலே, இன்னும் மற்றப் பள்ளிக்கூடங்களிலே வைக்கப்படும் சாதாரண பரீட்சைகளிலே எக்சாமினர்களெல்லாம், "பள்ளிக்கூடங்களிலே சரித்திரம், விஞ்ஞானம் போன்ற துறைகளிலும் தமிழின் மூலமாகப் படிக்கும் பிள்ளைகள் ரொம்ப அழகாக பரீட்சை எழுதுகிறார்கள்" என்று சொல்லுகிறார்கள். ஆனால் முன்பு பாஷைக் கஷ்டம் இருந்ததினாலே ரொம்பப் பிள்ளைகள் சரியாக விடை கொடுப்பதில்லை என்று பல எக்சாமினர்கள் சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய அனுபவத்திலே நான் பார்த்து இருக்கிறேன்.

தமிழை ஆதரிக்க வேண்டும், தமிழை அரசாங்க மொழி ஆக்க வேண்டும் என்பதைக் காங்கிரஸ் அரசாங்கம்தான் ஆரம்பித்தது. சுமார் 10 வருஷகாலமாக காங்கிரஸ் அரசாங்கம் இருந்தது. இவ்வளவு காலம் என் அதை அமலுக்குக் கொண்டுவரவில்லை என்றால் ஆந்திரர்கள் நம்முடன் இருந்தார்கள், மலையாளிகள் இருந்தார்கள், கன்னடியர்கள் இருந்தார்கள். அதனால் அதை காங்கிரஸ் அரசாங்கம் உடனடியாகக் கொண்டு வர முடியவில்லை. நவம்பர் 1-ம் தேதிக்குப் பிறகு எவ்வளவு விரைவில் இதைக் கொண்டு வரமுடியுமோ அவ்வளவு விரைவிலே மந்திரி சபை இதைக்கொண்டு வந்திருக்கிறது. அதனால் மறுமுறையும் நம்முடைய மந்திரிசபையைப் போற்றுகின்றேன்.

ஆனால் தமிழ் அரசாங்க பாஷை என்றால் தனித்தமிழ் ஆட்சியல்ல. மத்திய அரசாங்கத்தை விட்டுப் பிரிந்து தமிழ்நாடு தனித்து இருக்க வேண்டுமென்று ஒரு கட்சி இப்போது சொல்லிவருவதை நாம் காண்கிறோம். அதற்கும் இதற்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது. நம்முடைய அரசாங்கத்தினுடைய நோக்கம் ஒரே நோக்கம்தான். தமிழை அரசாங்க பாஷையாகச் செய்வதுதான் தமிழ் நாட்டிற்குப் பொருந்தும். ஆனால், தமிழ் நாடு தனித் தமிழ் நாடாக வேண்டும் என்பதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. இப்பொழுது தமிழை அரசாங்க பாஷையாக ஆக்கினால் இதில் நிர்வாகத்துக்குத் தகுந்த வார்த்தைகள் இல்லை என்று சிலர் சொல்லுகிறார்கள். அரசாங்க நிர்வாகத்திற்கு வேண்டிய பொருத்தமான தமிழ் வார்த்தைகளை வைத்துக் கொண்டு அத்துடன் கூட பழக்கத்தில் இருந்துவரும் பிறபாஷை—அதாவது ஆங்கிலம், வட மொழி—வார்த்தைகளையும் உபயோகித்துக் கொள்ளலாம். ஆகவே எல்லா வார்த்தைகளும் தமிழ் வார்த்தைகளாகவே இருந்துவிட வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லை. அனுஷ்டானத்திலுள்ள பிற பாஷை வார்த்தைகளையும் கையாண்டு

11-20 a.m. கொள்ளலாம். உதாரணமாக "On demand" என்னும் ஆங்கில வார்த்தைகள் "அண்டிமாண்ட்" என்றே வழங்கிவருகிறது. அது தமிழாகவே போய் விட்டது. அப்படியிருக்க இதற்குப் பதிலாக தனித் தமிழ் வார்த்தை கண்டுபிடிக்க வேண்டிய அவசியம் இல்லை. சந்தோஷம் என்ற வார்த்தை வட மொழியிலிருந்து வந்ததாக இருந்தாலும் அது மகிழ்ச்சி என்ற பொருளையே குறிக்கிறது. இதை நாம் வடமொழி வார்த்தை என்று நாம் கருதுவதே கிடையாது. அப்படிப்பட்ட வார்த்தைகளையும் தமிழ் பாஷையில் எடுத்துக்கொண்டு விட்டால் தமிழ் பாஷை வளரும். அந்த வார்த்தை கூடாது, இந்த வார்த்தை கூடாது என்ற குறுகிய மனப்பான்மை இருந்தால் பாஷை வளரமுடியாது. இன்று ஆங்கிலம் வளர்ந்து செழிப்படைந்திருக்கிறதென்றால் அதில் பல பாஷை வார்த்தைகள் சேர்ந்திருக்கின்றன. அதனால் இன்று அது உலகப் பிரசித்திபெற்ற பாஷையாக இருக்கிறது. நாமும் பல பாஷைகளில் இருந்து வரும் வார்த்தைகளையும் கலைச்சொற்களையும் எடுத்துக் கொண்டால் நம்முடைய பாஷை ஆங்கிலத்தைப் போல் செழிப்படைந்து விடும். பிற பாஷையில் இருந்து வரும் சொற்கள் தமிழில் கலந்தாலும் தமிழானது அவைகளை ஜீரணித்துக் கொண்டு விடும், அவைகளைத் தமிழாகச் செய்து விடும் தனிச் சிறப்பு உண்டு என்று நமது மந்திரி அவர்கள் சொன்னார்கள். ஆகவே சாதாரணமாக பழக்கத்தில் இருந்துவரும் வார்த்தைகளையெல்லாம் நாம் அப்படியே உபயோகிக்கவேண்டும்.

தமிழ் பாஷை இன்னும் அதிகமாக அபிவிருத்தி அடைய வேண்டும் என்றால் சர்வகலாசாலைகளிலும் இதை உபயோகப்படுத்த வேண்டும். இப்பொழுது சர்வகலாசாலையின் வைஸ்-சான்சலர் அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ரொம்ப அறிவாளி. ஹைஸ்கூல்களிலே தமிழை "மீடியம் ஆப் இன்ஸ்ட்ரக்ஷன்-ஆகக் கொண்டு வந்தபோது அதற்கு எவ்வளவோ எதிர்ப்பு இருந்தது. இப்பொழுதும் சர்வகலாசாலை வரையில் தமிழிலே பாடங்களை வைக்கவேண்டுமென்றால இன்னும் எதிர்ப்பு இருக்கிறது. விஞ்ஞானப் பதங்கள் இல்லை. அதனால் சர்வகலாசாலை வரையில் வைக்க முடியாது என்று சிலர் சொல்லுகிறார்கள். ஆங்கிலத்திலே உள்ள சயன்டிபிக் டெர்ம்களை அப்படியே எடுத்துக் கொண்டு விட்டால் நிலைமையை சமாளித்து விடலாம். இப்பொழுது மெடிகல் காலேஜ்களில் உபயோகிக்கப்படும் வார்த்தைகளைப் பார்த்தால் அவைகளில் அனேகம் லத்தின் சொற்களாக இருக்கின்றன. அர்த்தம் மாறுமல் இருக்கவேண்டும் என்பதற்காக லத்தின் வார்த்தைகளை ஆங்கிலத்திலும் உபயோகித்துக் கொண்டு வருகிறார்கள். நான் சொல்வது ஆங்கிலம் கலந்த கலப்படத் தமிழாக இருக்கிறது. இருந்தாலும் அப்படித்தான் பேசவேண்டியிருக்கிறது.

டெக்னிகல் டெர்ம்களையும், சயன்டிபிக் டெர்ம்களையும் தமிழில் அப்படியே எடுத்துக் கொண்டு சர்வகலாசாலைகளிலும் தமிழை மீடியம் ஆப் இன்ஸ்ட்ரக்ஷனாக உபயோகப்படுத்துவதற்கு யாதொரு கஷ்டமும் இருக்காது என்று எண்ணுகிறேன். சர்வகலாசாலைகளிலே நாம் அதை ஆரம்பித்தால் அதிலிருக்கும் கஷ்டங்களை நிவர்த்திக்க வழி உண்டாகும். ஆரம்பிக்காமலே கஷ்டம் இருக்கிறது என்று சொல்லிக்கொண்டிருந்தால் ஒன்றும் முடியாது. ஆரம்பித்தால்தான் எழுத்தாளர்கள் புதிய புத்தகங்களை எழுதுவார்கள். புத்தகங்கள் எப்பொழுது வரும் என்றால் டிமாண்ட் இருந்தால்தான் வரும். ஆரம்பித்து விட்டால் இருக்கின்ற பெரிய எழுத்தாளர்கள் புத்தகங்களை எழுதுவார்கள். டிமாண்ட் இல்லாததினால் சபாவை இல்லை. சபா நாயகர் அவர்கள் இதோடு என்னுடைய பேச்சை முடிக்க வேண்டுமென்று கட்டளை இடுவதாகத் தெரிகிறதால் என் வார்த்தையை முடித்துக் கொள்ளுகிறேன்.

SRI V. BHASHYAM AYYANGAR: கனம் தலைவர் அவர்களே, இந்த மசோதாவை நான் முழு மனதுடன் ஆதரிக்கிறேன். ஒவ்வொரு ராஜ்ய அரசியலும் அந்த ராஜ்ய மக்களின் தாய் பாஷையில் நடத்தப்பட வேண்டும் என்பது நமது தேச பிதாவான காந்திஜீ அவர்களுடைய நோக்கமாகும். அனேக வருஷங்களுக்கு முந்தியே அவர்

28th December 1956] [Sri V. Bhashyam Ayyangar]

மக்களுக்குத் தெரிந்த அவர்களுடைய தாய் பாஷையில் எல்லா விவகாரங்களும் நடத்தப்பட வேண்டும் என்று வற்புறுத்தினர். காங்கிரஸ் மகாசபையிலும் அதை ஆதரித்தார்கள். நமக்கு சுயராஜ்யம் வந்த பிறகு இப்போது நாமும் நமது அரசியலாரும் அதை ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அதே மாதிரி சர்க்காரும் இந்த மசோதாவைக் கொண்டு வந்திருப்பது எல்லோருக்கும் மிகுந்த சந்தோஷத்தை அளிக்கிறது. தாய் பாஷையில் ஆட்சி மொழி இருக்க வேண்டும் என்ற இயக்கமானது இப்போது ஏற்பட்டதல்ல, வெகு நாட்களுக்கு முன்பிருந்தே நடந்து வருகிறது.

வெகு காலத்திற்கு முன்பு, சமஸ்கிருதம் உயர்ந்த பாஷையாக, தேவ பாஷையாக கருதப்பட்டு வந்தபோது, சமஸ்கிருதத்தில் செய்யப்படும் எல்லா வ.ஷயங்களையும் தமிழில் செய்யவேண்டுமென்று சைவ வைஷ்ணவ இருமதத்தினரும் கஷ்டப்பட்டு சமஸ்கிருத விவாதங்களிலிருந்தும் கிரந்தங்களிலிருந்தும் ஞான வளர்ச்சிக்குரிய எல்லா விஷயங்களையும் தமிழில் கொண்டு வந்திருக்கிறார்கள். எனக்குத் தெரிந்த வரையில் வைஷ்ணவத்தில் சமஸ்கிருத வேதம் இருந்தாலும் தமிழ் (திராவிட) வேதத்தையும் சடகோபனும் நம்மாழ்வாரும் இயற்றியிருக்கிறார்கள். தமிழை ஆதரித்து எல்லா மத சம்பந்தமான தர்க்க சம்பந்தமான விவாதங்களையும் நடத்தி வந்திருக்கிறார்கள். முக்கியமாக, இப்போது வைஷ்ணவக் கோயில்களில் சமஸ்கிருத வேதத்திற்குக் கொடுப்பதைக் காட்டிலும் அதிக மரியாதை தமிழ் வேதத்திற்குக் கொடுக்கப்படுகிறது. உற்சவ காலங்களில் பகவான் ஊர்வலம் வரும்போது பகவானுக்கு முன்பாக தமிழ் வேதத்தைப் பாடுபவர்கள் போகிறார்கள். பகவானுக்குப் பின்னே சமஸ்கிருத வேதத்தைப் பாடுகிறவர்கள் போகிறார்கள். நம்மாழ்வாரால் செய்யப்பட்டுள்ள திராவிட வேதத்தை ஏற்றுக்கொண்டு அதைத் தேடிக்கொண்டு பகவான் போவதால் தான் திராவிட வேதத்திற்குப் பின்னால் பகவான் செல்கிறார் என்பது இதன் தாத்பர்யம். தமிழுக்கு, திராவிட பாஷைக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆங்கிலத்தை விட்டுவிட்டு தமிழில் நிர்வாகம் நடத்துவது புதிது அல்ல. இம்மாதிரி செய்திருப்பது எனக்கு ரொம்பவும் சந்தோஷம். அரசாங்கத்தில் இந்த ஏற்பாட்டை சுலபமாகச் செய்யக்கூடும் என்று எனக்குத் தோன்றுகிறது. கலெக்டர் ஆபீஸ்களில் தமிழில் கடிதங்கள் எழுதும் வழக்கம் முன்பே இருந்திருக்கிறது. கலெக்டர் ஆபீஸில் ஒரு உத்தியோகஸ்தருக்கு "வெர்னகுலர் ஹெட்கிளார்க்" என்றே உத்தியோகப் பெயர். மேலும் போர்ட் ஆப் ரெவின்யூவிலும் தமிழில் நிர்வாகம் நடந்திருக்கிறது. ஆகையால் தமிழிலேயே அரசாங்கம் நடக்கப்போகிறது என்பதை அறிந்து நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். தமிழை வளர்ப்பது பற்றி பல கனவான்கள் பல விஷயங்கள் சொன்னார்கள். அவற்றையும் நான் முழு மனதுடன் ஆதரிக்கிறேன். 11-30 a.m.

* SRI MAHOMED USMAN : Mr. Chairman, Sir, I am sorry I am unable to speak in Tamil because my mother-tongue is Urdu. All the same I have said in this House times without number that, when Madras becomes a unilingual State, Tamil should be the State language. I must congratulate my esteemed Friend Mr. C. Subramaniam to whose lot it has fallen to introduce this historic Bill in both the Houses of the Madras Legislature. The occasion of the introduction and passage of this Bill is a historic occasion, because the change that this Bill makes in the State is a very important change.

In this House there may be Members who do not know Tamil or who cannot express themselves clearly in Tamil. During the transition stage, they should be allowed to speak in English or in any other language with which they are acquainted. Whenever

a great change is made, there is always a transitional period and provision must be made for it. I am sure the Hon. Sri C. Subramaniam will agree with me in this matter.

The Hon. Sri C. Subramaniam deserves our congratulation on introducing this historic Bill and we are very much indebted to him. This House is passing a Bill of very great importance. This is a historic occasion and I should like to congratulate the House on passing the Bill. I have great pleasure in supporting the Bill and thanking the Hon. the Minister for Finance and Education for introducing it.

*SRI V. V. RAMASWAMI: கனம் அவைத் தலைவர் அவர்களே, நமது ராஜ்யத்தில் தமிழ் மொழியை ஆட்சி மொழியாகக் கொண்டு வருவதற்காக நமது அமைச்சர் அவர்கள் இன்று இந்த சபையில் ஒரு சட்ட மூலத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். இந்தச் சட்ட மூலத்தை ஆதரித்துப் பேசும்போது அவர் கொண்ட மகிழ்ச்சியையும் அடைந்த பெருமிதத்தையும் நான் மிகவும் பாராட்டுகிறேன்.

கடந்த பத்து ஆண்டுகளாக என்னைப் போன்றவர்கள், 'தமிழ் நாடு வரவேண்டும், தமிழ் ஆட்சி மொழியாக ஆகவேண்டும்' என்று எங்கெங்கு வாய்ப்பு ஏற்பட்டதோ அங்கெல்லாம் மக்களிடத்தில் சொல்லி வந்திருக்கிறோம்; சட்டசபையிலும் சொல்லி வந்திருக்கிறோம். இறுதியாக, காலம் தாழ்த்தப்பட்ட போதிலும்கூட, தமிழை ஆட்சி மொழியாக ஆக்குவதற்காக இந்த சட்டமூலத்தைக் கொண்டுவந்திருப்பது, என்னைப் போன்றவர்களுக்கும் தமிழ் மக்கள் அனைவருக்கும் வெற்றி என்றே சொல்ல வேண்டும். (ஒரு குரல்: ஆமாம்). யான் எழுதும் கடிதங்களில் எல்லாம் கையெழுத்துப் போடுமுன் 'தமிழ் வெல்க' என்று இதுகாறும் எழுதி வந்தேன். அதே மாதிரி தமிழ் இன்று வெற்றியடைந்தது குறித்து நான் பூரிப்படைகிறேன்.

இனி, இந்த ராஜ்யம் தமிழ் நாடாக மலர வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை. ராஜ்யம் தமிழ் நாடாக மலரப்போவதைப் பார்ப்பதற்காகத்தான் நான் காத்துக்கொண்டிருக்கிறேன். இனிமேல் ராஜ்ய ஆட்சி மொழி தமிழாக இருக்கப்போவதாலும், பொது மக்களின் தொடர்ந்த கோரிக்கை காரணமாகவும், இந்த ராஜ்யம் ஓராண்டுக்குள் தமிழ் நாடு என்ற பெயருடன் மலர்ந்துவிடும் என்று எனக்குப் பூரண நம்பிக்கை இருக்கிறது.

தமிழை ஆட்சி மொழியாக ஆக்கும்போது முதன் முதலில் வட்டார அலுவலகங்களில் தமிழ் மொழியில் நிர்வாகம் நடத்தப்பட வேண்டும் என்பது அரசியலாரின் விருப்பமாக இருக்கிறது. படிப்படியாகத்தான் செல்ல வேண்டும் என்ற விஷயத்தில் நம்மிடையே அபிப்பிராயபேதம் இருக்காது. எனினும், தமிழில் தேர்ந்த அதிகாரிகள் தங்கள் கருத்துக்களையும் கட்டளைகளையும் தமிழில் தெரிவித்தாலும், நீதிமன்ற அதிகாரிகள் தங்கள் தீர்ப்புக்களையும் கட்டளைகளையும் தமிழில் தெரிவித்தாலும், அதையெல்லாம் அரசாங்கத்தார் தடை செய்யாமல் ஊக்கமளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அனேகமாக எல்லா மாவட்டங்களிலும் இறுதியான கட்டளை தவிர மற்றெல்லா நடவடிக்கைகளும் தமிழிலேயே நடைபெறுகின்றன. ஆகையால் கட்டளைகள் ஆங்கிலத்தில் தான் பிறப்பிக்கப்பட வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தை நீக்கி, தமிழ் நன்றாகத் தெரிந்துள்ளவர்கள் தமிழில் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தால் அதை ஆதரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நமது ஆட்சி மொழி தமிழாக ஆக்கப்படும்போது கல்வி (போதனை) மொழியும் தமிழாக ஆகிவிட வேண்டும் என்பதே நமது கல்வி அமைச்சர் அவர்களின் விருப்பம் என்று எனக்குத் தெரிகிறது.

கல்வியும் தமிழில் போதிக்கப்பட வேண்டும் என்று பொதுமக்கள் விரும்ப ஆரம்பித்துவிட்டபடியால், பள்ளி நிர்வாகிகளும் கல்லூரி நிர்வாகிகளும் போதனு மொழி தமிழாக இருக்கவேண்டும் என்று உறுதிப் பாட்டுடன் இருக்கிறார்கள். ஆகவே பள்ளி நிர்வாகிகளும் கல்லூரி நிர்வாகிகளும் உறுதிப்பாட்டுடன் இருக்கும்போது பல்கலைக்கழகத்தினர் அதற்கு இணங்கித்தான் ஆகவேண்டுமே தவிர, அதை எதிர்த்து நிற்க முடியாது என்பது என் திடமான நம்பிக்கை. இந்த மாதிரி விஷயங்களில் முதலில் பொது மக்களின் அபிப்பிராயத்தை அறிந்துதான் நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழை அரசாங்க அலுவலகங்களில் நிர்வாக மொழியாக ஆக்குவதற்கு ஆரம்பிக்கும்போது கவனிக்க வேண்டிய சில விஷயங்களைச் சொல்லிக் கொள்கிறேன். நிர்வாகத்திற்கு வேண்டிய தக்க தமிழ்ச் சொற்களை ஒரு குழுவினர் தயாரித்து அரசாங்கத்திடம் ஒப்படைத்திருக்கிறார்கள். அந்தப் பட்டியலை எல்லா அலுவலகங்களுக்கும் சுணங்காமல் அனுப்பி அச் சொற்களைப் பயன்படுத்தும்படி செய்யவேண்டும். மேலும் தமிழிலே ஆட்சி நடக்க ஆரம்பித்துவிட்டது என்றவுடன் பொதுமக்கள் தாராளமாக பழக்கத்திலே உபயோகிக்கும் சொற்களையும் உபயோகித்துக் கொண்டால் எல்லோருக்கும் எளிதில் புரியும். தமிழ் எழுத்துக்களை நல்ல முறையிலே செப்பனிடுவதற்காக திரு. டி. எஸ். சொக்கலிங்கம் அவர்களை தலைவராகக் கொண்ட ஒரு குழுவை அரசாங்கத்தார் ஏற்படுத்தியதாக அறிகிறேன். அவர்களுடைய சிபார்சுகளை எடுத்துக்கொண்டால் சில குறிப்பிட்ட அச்சு வைத்திருப்பவர்கள்தான் அதனால் பயன் அடைவார்கள். மேலும் அதற்கு பொதுமக்களின் எதிர்ப்பு இருந்ததால் அது கைவிடப்பட்டது என்று அறிகிறேன். 11-40 a.m.

தமிழ் டைப்ரைட்டர்கள், அதாவது கை அச்சு இயந்திரங்களின் சாவித் தட்டு ஒரேவிதமாக இல்லையென்றும், அவைகளில் ஏதோ குறைபாடு இருப்பதாகவும் தெரிகிறது. இதுபற்றி பேராசிரியர் திரு. ராஜன் அவர்களைத் தலைமையாகக் கொண்ட குழுவினர், தங்கள் சிபார்சுகளை அரசாங்கத்திற்கு அனுப்பியிருப்பதாகவும் தெரிகிறது. அதை அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொண்டு . . .

THE HON. SRI C. SUBRAMANIAM: இன்றுதான் அதை ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டேன்.

*SRI V. V. RAMASWAMI: இன்றுதான் அதை ஒப்புக்கொண்ட தாகவும், கையெழுத்திட்டதாகவும் கனம் அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். அதற்காக அவரை வாழ்த்துகிறேன்.

தமிழ் சுருக்கெழுத்து சீர்திருத்தம் சம்பந்தமாக ராவ் சாகிப் திரு. சிவானந்த முதலியார் அவர்களைத் தலைமையாகக் கொண்ட குழுவினர் ஒரு கையேட்டை தயாரித்திருப்பதாகத் தெரிகிறது. அதையும் ஏற்றுக் கொண்டு சீக்கிரம் அமுலுக்குக் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நாளடைவில் கோவில்களிலே தமிழிலே வழிபாடு நடத்தவேண்டிய முயற்சி எடுக்கவேண்டும். அதற்கு ஆதரவாக பொதுமக்கள் அபிப்பிராயம் இருக்கிறது. அதற்குவேண்டிய கட்டளைகளை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்தப் பெருமிதத்திலே பங்குகொள்ளும் அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். ஏனென்றால் அவர் நல்ல தமிழிலே, இனிய தமிழிலே பேசும் ஆற்றல் உள்ளவர். நமது நிதி அமைச்சர் அவர்கள் இதுகாறும் ஆங்கிலத்தில் பேசவேண்டிய நிர்ப்பந்தத்தில் இருந்தவர். இன்று அதிலிருந்து விடுபட்டிருக்கிறார் என்பதை அறிந்து அவர்களை மிகவும் பாராட்டுகிறேன்.

நமது தமிழன்னை அரசியாக இருந்து, 200 ஆண்டுகள் அடிமையாக இருந்ததினால் பணிப்பெண்ணாக, கேவலமான நிலைமையில் இருந்து இன்று பழையபடி உயர்ந்த நிலையை அடைகிறாள், அதற்கு முடிசூட்டுகிறோம்,

[Sri V. V. Ramaswami] [28th December 1956

அந்த விழாவிலே எல்லோரும் பங்குகொள்ளுங்கள் என்று அழகான தமிழிலே அவர் சொன்னாரே அதுவே எங்களுக்கு மிகவும் பெருமிதத்தைக் கொடுக்கிறது. இந்த வாய்ப்புக் கிடைத்ததற்காக அவரைப் பாராட்டிக் கொண்டு, தமிழ் வென்று விட்டது என்றும் தமிழ்நாடு மலரவேண்டும் என்றும் கூறிக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

* DR. A. SREENIVASAN: கனம் தலைவர் அவர்களே, இந்த மசோதா எந்த பிரின்சிபிலுக்காக கொண்டுவரப்பட்டிருக்கிறதோ அதற்குத் தான் என்னுடைய வரவேற்பை வைத்துக்கொள்ளமுடியும். அதற்கு மேலே நீட்ட முடியாது. என்ன காரணத்தினாலே என்றால் இரண்டாவது ஷரத்திலே "Tamil to be the official language of the State" என்று இருக்கிறது. ஆனால் மூன்றுவது ஷரத்திலே "English to be continued to be used for official purposes until the Government otherwise direct" என்று இருக்கிறது. ஒருவன் நீந்தக் கற்றுக்கொள்ளவேண்டுமானால் அவனைத் தண்ணீரில் போட்டால்தான் நீந்துவான். அதேபோல் மூன்றுவது ஷரத்தில் சொல்லப்பட்டிருப்பதைப் பார்த்தால் இத்தனை நாளும் நடந்த பாதையிலேயே இனியும் நடந்து கொண்டு போவதைத் தவிர வேறென்றும் நடைபெறாது. மூன்றுவது கிளாஸை வைத்துக்கொண்டு, அதே சமயத்தில் தமிழிலும் புகுந்து கொள்ளவேண்டும் என்றால் அதில் தகராறு ஏற்படும். அவ்வளவு சௌகரியமாக இருக்கும் என்று எனக்குத் தோன்றவில்லை. ஆகவே மூன்றுவது ஷரத்து கூடாது.

1948-ம் வருஷத்திலே திருச்சி ஜில்லாவிலே தமிழை நிர்வாக பாஷையாகப் போட்டார்கள். அப்படிப்போட்டார்களே, அதுவும் 1956-ம் வருஷம் இதுவரைக்கும் தமிழில் எவ்வளவு நடந்தது, எந்தெந்த பாகங்களில் தமிழ் வெற்றி அடைந்தது, எதிலே வெற்றியாகவில்லை, என்பது யாருக்கும் தெரியாது. ஒருவேளை கவர்ண்மென்டாருக்குத் தெரியுமோ என்னவோ? ஆனால் சாதாரண ஜனங்கள் திருச்சியிலே தமிழை இந்த 8 வருஷ காலமாக நிர்வாக பாஷையாகப் போட்டது எவ்வளவு தூரம் வெற்றி அடைந்தது என்பதைப்பற்றி ஒன்றும் தெரிந்துகொள்ள முடியவில்லை. 1948-ம் வருஷத்திலே திருச்சியில் தமிழை நிர்வாக பாஷையாகச் செய்த ரீதியிலேயே இந்த மசோதாவின்படி தமிழை ராஜாங்க பாஷையாகச் செய்வதும் இருக்கும் என்றால் இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்க வேண்டாம். அமைச்சர் அவர்கள் அதற்கு என்ன காரணம் சொல்வாரோ? எனக்குத் தெரிந்த வரைக்கும் நிர்வாகம் தமிழிலேயே பண்ணுங்கள் என்றுதான் சொல்லுவேன்.

இப்பொழுது நீரும் நானும் தமிழிலே பேசிப் பிரயோஜனம் இல்லை. குமாஸ்தாக்களுக்கும் செக்ரடரிகளுக்கும் எவ்வளவு தூரம் தமிழ் தெரியும் என்ற விஷயத்தைத் தெரிந்துகொள்ளவேண்டும். ராஜ்யப் புனரமைப்பு ஆன பிறகும் எத்தனைபேர் தமிழைத் தாய் மொழியாகக் கொள்ளாதவர்கள் செக்ரடரிகளாகவும், குமாஸ்தாக்களாகவும் இருக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும். அவர்கள் எத்தனை நாளைக்குள் தமிழ் கற்றுக் கொண்டு வரப்போகிறார்கள் என்பது கடவுளுக்குத்தான் வெளிச்சம்.

என். ஜி. ஒக்களுக்கும், கிராமாதிகாரிகளுக்கும் இப்பொழுது எதோ தேர்தலுக்காக, கூடுதலான பஞ்சப்படி கொடுத்திருக்கிறார்களே அதைப் போல சமீபத்தில் எலெக்ஷன் வருவதை உத்தேசித்து மக்களின் கண்ணில் மண்ணைவாரிப் போடவேண்டும் என்றே இந்த மூன்றுவது ஷரத்து இருப்பதாகத் தெரிகிறது. English to be continued to be used for official purposes என்றால் என்ன அர்த்தம்? குதிரையைத் தட்டி விட்டு விட்டு பிழைத்தவர்கள் பிழைக்கட்டும், பிழைக்காதவர்கள் போகட்டும் என்ற நினைவுதான் இருக்கிறதென்று சொல்லத் தோன்றுகிறது. அது போல் இருக்க முடியாது. இருந்தாலும் அதுபோன்ற அபிப்பிராயத்திற்கு இந்த மசோதா இடம் கொடுக்கிறது அதற்குத்தான் நான் குறை கூறுகிறேன். வேறென்றும் இல்லை. அவ்வாறு இல்லையென்றால் நன்றாக இருக்கும். பார்க்கப்போனால் இது 'எலெக்ஷன் ஸ்டண்ட்' மாதிரிதான்

தோன்றுகிறது. அப்படி இல்லே என்பதற்கு என்ன அறிகுறிகள் உண்டோ அதை அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னல்தான் புரியும்; என்னல் இப்போது புரிந்துகொள்ள முடியவில்லே.

Administrative டர்ம்ஸ் பற்றிச் சொன்னர்கள், அது ரொம்பக் கஷ்டமான விஷயம். அனேக இடங்களிலே ஆங்கிலத்திலே அமைத்துக்கொள்ளும்படியாக இருக்கும். அட்மினிஸ்ட்ரேடிவ் டெர்ம்ஸ் தமிழிலே வந்தால் போதாது. இதுவரையில் ஆங்கிலத்திலேயே நினைத்துத் தமிழிலேயே பேசிவந்திருக்கிறோம். அப்படி இருக்கும்போது திடீரென்று நாம் தமிழிலே பேசுவது கஷ்டமாக இருக்கும். ஒரே ஒரு விஷயம் சொல்லுகிறேன். தமிழ் பத்திரிகைகள் எப்படி எழுதியிருக்கிறதென்றால் ஒரு பத்திரிகையிலே **woman thief** என்பதற்கு பெண் திருடன் என்று எழுதப்பட்டிருந்தது. பெண் திருடன் என்ற வார்த்தைகளைப் படித்த உடனே எனக்கு அர்த்தம் விளங்கவில்லே. இதை **news column**-த்தில் போட்டிருந்தார்கள் ஒரு பெரிய பத்திரிகையில். இன்னொரு பேப்பரில் **causeway** என்பதற்கு "படுகைப்பாலம்" என்று போட்டிருந்தார்கள். படுகை என்றால், வாய்க்கால், வரப்புகளின் பக்கத்திலுள்ள நிலங்களைக் குறிக்கும். தமிழ் டிக்ஷனரியை எடுத்துப் பார்த்ததில் பத்திரிகையில் போட்டிருந்தது தப்பு என்று தெரிந்தது. தமிழிலே நினைத்துத் தமிழிலேயே எழுதும் பத்திரிகைகளுக்கே இவ்வளவு கஷ்டம் இருந்தால், எப்போதும் ஆங்கிலத்திலேயே நினைத்து ஆங்கிலத்திலேயே பேசிவரும் நாம் எப்படியோ காலத்தைத் தள்ளிவிட்டோம். திருந்துவது கஷ்டமானது, நாட்கள் பிடிக்கும். முக்கியமாக குமாஸ்தாக்கள் செக்ரடரிகள் எத்தனே பேருக்குத் தமிழ் தெரியும்? எத்தனேயோ பேர்கள் தமிழ் தெரியாதவர்கள் இருக்கிறார்கள். அவர்களே வைத்துக்கொண்டு எப்படி தமிழில் அரசாங்கம் நடத்துவது? சமுத்திரத்திலே அலே ஓய்ந்த பிற்பாடுதான் ஸ்நானம் பண்ணவேண்டுமென்று ஒரு புத்திசாலி காத்திருந்தானும்! அம்மாதிரித்தான் இருக்கிறது இந்த நிலே. இருந்தாலும் எலெக்ஷன் ஸ்டண்ட் ஆக இருக்குமோ என்று எனக்குத் தோன்றுகிறது. உண்மையாகவே சீக்கிரமாகத் தமிழில் அரசாங்கம் நடத்துவதைக் கொண்டுவந்துவிட்டால் நன்றாக இருக்கும்.

எலெக்ஷனுக்குப் போகப்போகிறார்கள். தமிழை ஆட்சி மொழியாகப் பண்ணிவிட்டோம் என்ற மார் தட்டிக்கொண்டு போய்விடலாம். அது இல்லாமலே தமிழிலே இன்றைக்கு ஆரம்பித்துவிட்டோம் என்று சொன்னல் போதாது. கனம் அமைச்சர் அவர்கள் **floor of the House**-ல் பத்தாயிரம் விஷயங்களைச் சொல்லலாம். ஆனல், அதெல்லாம் சட்டம் ஆகாது. வெளியிலே ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். இன்றையதினமே ஓர் உத்திரவு போடும் பட்சத்தில் ரொம்ப நன்றாக இருக்கும். எத்தனே தமிழர்கள் அல்லாதவர்கள் கவர்ண்மெண்ட் உத்தியோகத்தில் இருக்கிறார்கள்? அவர்களுடைய கதி என்ன? அவர்களே வேறிடத்திற்கு அனுப்பமுடியுமா என்பதையும் யோசனே செய்தால் நன்றாக இருக்கும்.

SRI A. GAJAPATHY NAYAGAR: கனம் அவைத் தலைவர் அவர்களே, "என்னே நன்றாக இறைவன் படைத்தனன் நன்றாகத் தமிழ் செய்யுமாறு" என்று திருமூலர் திருமந்திரத்தில் ஒதுகிறார். அந்த வழி வந்த, கனம் நிதி அமைச்சர் அவர்கள் தமிழை ஆட்சி மொழியாக ஆக்குவதை நான் வரவேற்கிறேன். இரண்டொரு ஆண்டுகளுக்கு முன்பு இந்த சபையின் கண், தமிழ் ஆட்சி மொழியாக ஆக வேண்டும் என்று நான் உள்பட 11 பேர்கள் இந்த சபையில் ஒரு மசோதா கொண்டு வந்தோம். அந்த சபையிலும் 30 பேர்கள் அந்தமாதிரி ஒரு மசோதாவைக் கொண்டுவந்தார்கள். அப்போது அது ஏற்கப்படாவிட்டாலும், எங்கள் கோரிக்கை நிறைவேறும் காலத்தை எதிர்பார்த்து வந்தோம். இப்போது தமிழ்மொழி ஆட்சி மொழியாக ஆக வேண்டிய காலம் வந்துவிட்டது. இந்த சமயத்தில் இந்த மசோதா வந்திருக்கிறது. இந்த மசோதா கொண்டுவந்திருப்பதை யாரும் குறை கூறமுடியாது.

[Sri A. Gajapathy Nayagar] [28th December 1956

நாம் எல்லோரும் தமிழை வளர்க்கவேண்டும். தமிழ் வளர்ச்சி பற்றி நாம் கவலைப்படவேண்டியதில்லை. என்னிடம் கவர்னர் பெருமான் ஸ்ரீ ஸ்ரீபிரகாசா அவர்கள் சொன்னார்கள் : " திருவள்ளுவர் திருக்குறள் இயற்றினர். அவர் இன்றைக்குத் தமிழ் நாட்டிற்கு வந்து பேசினால் அவர் பேசும் தமிழை நீங்கள் புரிந்துகொள்வீர்களா.? ஆகவே ஏற்றுக் கொள்ளக்கூடிய சொற்களை மட்டும் மற்ற மொழிகளிலிருந்து ஏற்றுக்கொள் வோம். பிற சொற்கள் எதோ வரலாம். நல்ல சொற்களை ஏற்றுக் கொள்வோம், புறக்கணிச்க வேண்டாம். "

நாம் தமிழ் பற்றுகொண்டு திருக்குறள், திருமூலரின் திருமந்திரம் முதலியவைகளைப் படித்து நல்ல தமிழ்ப்பண்புகளை வளர்த்தால் தமிழ் நாட்டில் எல்லோரும் ஒன்றுக வாழலாம்.

தமிழ் நாடு எந்த மொழியையும் புறக்கணிக்காது. தமிழை நன்றுகக் கற்கவேண்டும். மற்ற மொழிகளிலிருந்து தகுந்த வார்த்தைகள் தமி ழுக்கு வரலாம். ஆனால், நாம் தமிழை நன்றுகக் கற்காமல் சோம்பேறி களாய், வீணர்களாய் இருந்துகொண்டு, மற்ற மொழிகளிலிருந்து அனுவசிய மாக வார்த்தைகளை எடுத்துக்கொள்ள வேண்டாம். நல்ல தமிழ் நன்றுக வளரும்படி செய்யவேண்டும்.

இப்போது உடனடியாக மாவட்ட நிர்வாகத்தைத் திருத்தியமைக்கும் மசோதா வரப்போவதாகத் தெரிகிறது. இதை எல்லாம் செய்யும்போது கூடியசீக்கிரம் மாவட்டங்களுக்கும் தமிழை ஆட்சி மொழியாகக் கொண்டு வர வேண்டுமென்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

தமிழில் நன்றுக ஆட்சி நடத்துவதற்கு கல்லூரிகள் துணைபுரியமுடியும். அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணை வேந்தரான ஸ்ரீ நாராயணசுவாமி பிள்ளையும், சென்னை பல்கலைகழகத் துணைவேந்தரான ஸ்ரீ லட்சுமணசுவாமி முதலியாரும் இந்த சபையில் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். அவர்கள் முயற்சி எடுத்துக்கொண்டு கல்லூரிகளில் தமிழை நன்றுக வளர்க்கவேண்டும். கல்லூரித்தமிழ் இங்கே சட்டத் தமிழாக இருக்கவேண்டும்.

மேலும், அரசியல் சட்டத்தில் 348-வது பிரிவில் சில மசோதாக்களும் பிரகடனங்களும் (Proclamations) ராஜ்ய மொழியில் (தமிழில்) வர லாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. 210-வது பிரிவில் " **Business in the Legislature of a State shall be transacted in the official language of the State or the Indian Union** " என்று சொல்லப்பட்டிருக் கிறது. மசோதாக்களும் சட்டங்களும் பிரகடனங்களும் தமிழில் வரும் பொழுது உடனடியாக சேர்ந்தாற்போல் சட்டசபையில் நடைபெறும் நடவடிக்கைகளும் தமிழில் வரவேண்டும். இந்த சட்டசபையில் கேட்கப் படும் மூலக் கேள்விகள், விடைகள் எல்லாம் தமிழில் இருப்பதுதான் நல்லது. அப்போதைக்கப்போது தமிழ் உபயோகத்தை விஸ்தரிப்பதற்கு இந்த மசோதாவில் வகை செய்யப்பட்டிருக்கிறது. அரசாங்கத்தார் விடா முயற்சியுடனும், ஊக்கத்துடனும் தமிழ் உபயோகத்தைப் பூரணமாக விஸ்தரிப்பார்கள் என்று நம்புகிறேன்.

11-50 a.m. இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். இப்போது ஆட்சியில் உயர் பதவிக்கு வந்தால் " ஆங்கிலம் தெரியுமா ? " என்று கேட்கிறார்கள். இனிமேல் " தமிழ் தெரியுமா ? " என்று கேட்பார்கள்.

தமிழ் ஆர்வத்துடனும், தமிழ் பண்புடனும், தமிழ் நாடு யாவருக்கும் இடம் கொடுக்கவேண்டுமென்ற எண்ணத்துடனும், தமிழ் மொழியை நன்றுக வளர்க்க வேண்டுமென்ற எண்ணத்துடனும், உழைத்துவந்துள்ள கனம் முதலமைச்சர் ஸ்ரீ காமராஜ் அவர்களுக்குத் தமிழர்கள் தங்கள் பாராட்டுதலைத் தெரிவிக்கவேண்டும். அமைச்சர்களில் தலைசிறந்த கனம் ஸ்ரீ சி. சுப்ரமணியம் அவர்களுக்கும், கனம் அமைச்சர் ஸ்ரீ மாணிக்கவேலு அவர் களுக்கும், மற்றெல்லா அமைச்சர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ் பற்றி நான் இன்னும் அதிகமாகப் பேசினால்

அதைத் தமிழ் வெறி என்று சொல்வார்கள். ஆதலால், தங்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

SRIMATHI JOTHI VENCATACHELLUM: கனம் தலைவர் அவர்களே, நம் ராஜ்யத்திற்குத் தமிழ் ஆட்சி மொழியாக வரப்போகிறது என்பதைக் கேட்கும்போது நாம் எல்லோரும் மகிழ்ச்சி அடையாமல் இருக்க முடியாது. "தமிழில் சிறந்த தேன் மொழி உண்டா?" என்று பெரியோர் சொல்லக்கேட்டிருக்கிறோம். தமிழ் நாம் பார்க்க முடியாதபடி மறைவில் இருந்துவிட்டு இப்போது திரும்ப வரப்போகிறது என்பதைப் பார்க்கும்போது, தமிழ் அன்னை ஒரு யாத்திரைக்குச் சென்றுவிட்டு திரும்பி தன் மக்களிடத்தில் வருவதாகத் தான் நாம் கருத வேண்டும்.

தமிழ் ஆட்சி மொழி ஆவதால், ஆங்கிலத்திலிருந்து பல விஷயங்களைத் தமிழில் மொழிபெயர்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இந்த விஷயத்தில், நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்க்கும்போது உபயோகிக்கப்படும் தமிழ் சொற்களுக்கான ஒரு அகராதி அவசியம். அப்படி ஒரு அகராதி இருந்தால், பல தமிழ் சொற்கள் அந்த அந்த சந்தர்ப்பங்களில் உபயோகிக்கப்படும்போது அவைகளின் அர்த்தத்தைப் புரிந்துகொள்ளவும், தமிழில் புரியாத பல வார்த்தைகளைத் தெரிந்துகொள்ளவும் மக்களுக்கு சௌகரியமாக இருக்கும். மேலும், ஆங்கிலத்திலுள்ளவைகளைத் தமிழில் மொழி பெயர்க்கும் போது மக்கள் சுலபமாகப் புரிந்துகொள்ளக்கூடிய வார்த்தைகளையும், சுலபமாக உச்சரிக்கக்கூடிய வார்த்தைகளையும் உபயோகிக்க வேண்டும் என்று அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்கிறேன்.

நான் இந்த மசோதாவை ஆதரித்துப் பேசியிருக்காவிட்டால் என்னுடைய கடமையில் தவறியிருப்பேன் என்ற காரணத்தால்தான் நான் பேசுவதற்கு சந்தர்ப்பம் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். இது எப்படிஎன்றால், தாயிடம் பிள்ளைகளை விட பெண்களுக்குத்தான் பட்சம் அதிகம் உண்டு. அதையொட்டி என்னுடைய தாய் மொழி ஆட்சி மொழியாக வரப்போகிறது என்றால் அதை நான் வரவேற்காமல் இருக்க முடியாது. இந்த சந்தர்ப்பத்தைத் தந்த உங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மசோதாவைக் கொண்டுவந்த கனம் கல்வி அமைச்சர் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

SRI T. G. KRISHNAMOORTHI: கனம் அவைத்தலைவர் அவர்களே, இந்த மசோதாவை ஆதரிக்கவேண்டுமானால் தமிழில்தான் பேசியாக வேண்டும். சில ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு தமிழ் பிரமுகர் தமிழிசை விழாவிலே ஆங்கிலத்திலே தலைமையுரை நிகழ்த்தினார். அவர் ஆங்கிலத்திலேயே பயிற்சி பெற்றிருந்ததினால், தமிழில் அவருக்குப் பிரசங்கம் நிகழ்த்தும் வாய்ப்பு ஏற்படவில்லை. அதனால் அவர்களுக்குத் தமிழில் பேசுவதற்குத் திறமை இல்லை. சாதாரணமாக நாம் ஒரு மொழியிலே தேர்ச்சி பெறவேண்டுமானால் அந்த மொழியிலே குறைந்தபட்சம் இரண்டாயிரம் வார்த்தைகளாவது நாம் கையாளக் கற்றுக்கொண்டிருக்க வேண்டும். பிறமொழியில் இருந்து மொழிபெயர்க்க வேண்டுமானால் அம்மொழியில் குறைந்தபட்சம் 3,000 பதங்களையாவது நமக்கு கையாளத் தெரிந்திருக்கவேண்டும். ஆங்கிலத்திலே பயின்றவர்களுக்கு இது மிகவும் கஷ்டம். டாக்டர் ஸ்ரீனிவாசனைப் பாருங்கள், அவர் பேசும்போது தமிழ் அகராதியிலேயே கண்டிராத வகையில் "ஆகச்சே" என்ற பதங்களையெல்லாம் போடவேண்டியிருந்தது. தமிழிலேயே நிர்வாகம் நடத்தமுடியுமா என்ற சந்தேகம் எற்பட்டுவிடுகிறது. அந்த சந்தேகம் அவருக்கு வேண்டாம், தமிழிலேயே நடத்த இயலும் என்று சொல்ல விரும்புகிறேன். இப்போது ஜப்பானியர்கள் இருக்கிறார்கள், சைனக்காரர்கள் இருக்கிறார்கள், ரஷ்யர்கள் இருக்கிறார்கள். ஆங்கிலத்தையே கற்றறியாமல் இருந்தும், விஞ்ஞானத்தில் தேர்ச்சி பெறுகிறார்கள். ஆனால் நமக்குக் கஷ்டம் என்ன வென்றால் ஆங்கிலம் புகுந்துவிட்டது. சமீபத்தில் ஹிந்தி புகப்பார்க்கிறது. தமிழ் தனித்து வளர முடியுமா என்ற சந்தேகம் எற்பட்டுவிட்டது.

ஆங்கிலத்தை எடுத்துக்கொள்ளுங்கள் ; பல நூற்றாண்டுகளுக்கு முன்னால் "சாஸர்" காலத்தில் ஆங்கில பாஷையில் பார்த்தால் 20,000 பதங்கள் தான் இருந்திருக்கும். ஆனால் இப்பொழுது ஆங்கிலத்தில் 5 லட்சம் பதங்களுக்கு மேல் இருக்கின்றன. எங்கிருந்து வந்தது ?. பிற மொழி களாகிய லாடின், கிரீக், பிரஞ்சு போன்ற மொழிகளிலுள்ள பல பதங்கள் ஆங்கிலம் ஆக்கப்பட்டிருக்கின்றன. என் நம் தமிழில் இருந்தும் கூட அனேக பதங்கள் ஆக்ஸ்போர்ட் அகராதியில் சொல்லப்பட்டிருக்கின்றன ? பிரிட்டிஷார் இந்தியாவுக்கு வந்தார்கள். ஆங்கிலத்தை நிர்வாக பாஷை யாக ஏற்படுத்தப் பார்த்தார்கள். ஆங்கிலத்திலுள்ள பதங்களைக்கொண்டு மட்டும் இங்கு நிர்வாகம் நடத்திவிட முடியாது என்று அவர்கள் கண்டார் கள். அக்பர் காலத்தில் கையாளப்பட்ட பதங்கள், தாசில்தார், தானுக்கா, பிர்க்கா, டபேதார் முதலிய பதங்கள் அவ்வளவும் அக்பர் காலத்தில் விட்டுச் சென்ற பதங்கள். ஆங்கிலேயர் அவைகளையெல்லாம் கையாள முன் வந்தார்கள். ஆகையால் நாம் பிற மொழி கலப்பில்லாது ஆங்கிலத்தி லேயே தனித்து ஆட்சியை நடத்தவேண்டுமென்று இருந்திருந்தால் இவ் வளவு தூரத்திற்கு நிர்வாகம் வளர்ந்திருக்க முடியாது.

சோழ மன்னன் காலத்திலும் அவர்கள் எவ்வளவோ நிர்வாகப் பதங்களைக் கையாண்டு வந்தார்கள். 1068–69-ல் இங்கிலாந்தில் "வில் லியம் தி கான்கொரர்" காலத்தில் "டும்ஸ்டே" புஸ்தகத்தில் ஆங்கில சரித்திரத்தை எழுதினார்கள். ஜனன மரணக் கணக்கு, விவசாயம், சாகுபடி, இதுபோன்ற விஷயங்களை துல்லியமாக அதில் காணலாம். பிரமாதமாக எழுதப்பட்டிருக்கிறது. அதற்கு 100 ஆண்டுகளுக்குள்ளாக ராஜ ராஜச் சோழன் காலத்திலே 987 இ. பி. யில் அதே மாதிரித் தயாரித்திருக் கிறார்கள். அப்பொழுது நிலத்தை சர்வே செய்ததிலே 1/54,000 சதுர அங்குலம் என்று சீப் சர்வேயர் சர்வே கணக்குப்போட்டு சர்வே செய்திருக்கிறார்கள். குறவை நெடுங் கணக்கன் என்றால் சீப் சர்வேயர் என்று இருந்தது. குரவன் உதாசினப்பிரமன் என்றும் முக்கியமான பதங்கள் பஞ்சாயத்துக் கிராமத்திலே இருந்திருக்கின்றன, ஆங்கிலம் கலந்து விட்டதினாலே, விஞ்ஞானம் இத்தனை ஆண்டுகள். வளர்ந்து விட்டதினாலே தமிழ் தனியாக இயங்க முடியாது என்று சில தமிழ் அன்பர்கள், அதிலும் அண்மையில் தமிழ் அன்பர்களாக மாறிய வர்கள் தனித்தமிழ் பதங்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். "வான்ஊர்தி" என்றால் யாருக்குப் புரியும் ? கிராமத்தானிடம் சொன்னால் அடித்து விறட்டி விடுவார்கள். அவர்களுக்கு எரோப்பிளேன் என்று சொன்னால் தான் விளங்கும். "புகைவண்டி நான்மாடக்கூடலுக்கு 12 மணிக்கு நண் ணியது" என்றால் யாருக்கு என்ன புரியும் ? ரயில் வண்டி 12 மணிக்கு மதுரைக்குப் போய்ச் சேர்ந்தது என்றால் புரியும். இம்மாதிரி எல்லாம் சொல்லுவது வெறிபிடித்த செயல் அல்லவா ? ஒரு கதை சொல்ல துண்டு. பழைய காலத்தில் ஒரு வெள்ளைக்கார ஜட்ஜ் இருந்தார். அவர் முன்பாக மொழி பெயர்ப்பாளர் இருப்பார். ஒரு வழக்கு அவர்கள் முன் விசாரணைக்குக் கொண்டுவரப்பட்டது. ஒருவன் ஒரு பெண்ணைக் காட்டிலே கஷ்டப்படுத்திவிட்டான் என்பதுதான் வழக்கு. ஜட்ஜ் ஆங்கிலத்திலே அந் தப் பெண்ணைப்பார்த்து ஒரு கேள்வி கேட்டார். அந்த எம். எ. படித்த மொழிபெயர்ப்பாளர் "கோதாய், கானகத்திலே அவன் என் செய்தான் ?" என்று அந்தப் பெண்ணைக் கேட்டார். அந்தப் பெண்ணுக்கு ஒன்றும் புரிய வில்லை. உடனே அங்கிருந்த குமாஸ்தா எழுந்து "காட்டிலே அவன் என்ன செய்தான்" என்று கேட்க, அந்தப் பெண் உடனே பதில் அளித் தாள். ஆகவே புரியும்படியான முறையில் தமிழ் சொற்கள் அமைய வேண்டும், புரியாத முறையில் சிருஷ்டித்தால் அர்த்தம் இல்லை. டாக்டர் ஸ்ரீனிவாசன் அவர்கள் இந்த மசோதாவைக் கொண்டு வருவது தேர்தல் செப்படி வித்தை என்று இந்த மசோதாவின் மூன்றுவது ஷரத்தைக் குறிப்பிட்டுச் சொன்னார். திடீரென்று நாம் தமிழில் பேசுவதில் கஷ்டம் இருக்கிறதென்று சொன்னார். ஒன்றுக்கொன்று சம்பந்தம் இல்லாமல் பேசக்கூடிய டாக்டர் ஸ்ரீனிவாசன் அவர்கள் பேச்சைப்பற்றி மந்திரி அவர்கள் கவலைப்படவேண்டாம்,

12 noon.

28th December 1956]

THE HON. SRI C. SUBRAMANIAM : அவர்கள் சொல்லுவதைப் பற்றி நான் கவலைப்படவில்லை.

SRI T. G. KRISHNAMOORTHI: இத்தாலியில் இருந்து ஒருவன் தேசத்துரோகக் குற்றத்திற்காக நாடு கடத்தப்பட்டான். அதற்காக அவனைக் கப்பலில் ஏற்றி அனுப்பிவிட்டார்கள். அந்தக் கப்பல் ஒரு தீபகற்பத்தின் அருகே பாறையின் மீது மோதி உடைந்துவிட்டது. அவன் நீந்திக் கரை சேர்ந்தான். அங்கே ஒரு ஆள் வந்தான். நீந்திச் சென்றவன் அந்த ஆளைக் கூப்பிட்டு "இங்கே வா" என்றான். அவன் அருகில் வந்தான். "இங்கே ஒரு சர்க்கார் இருக்கிறதா?" என்றான். அவன் இருக்கிறது என்று சொன்னான். "நீ போய், அதற்கு நான் எதிரி என்று சொல்" என்று சொன்னானாம். அந்த நீந்திச் சென்றவன் இந்தமாதிரியாகப் பேசுபவர் டாக்டர் ஸ்ரீனிவாசன் அவர்கள்.

DR. A. SREENIVASAN : உங்களைப்போல் பக்க தாளம் போட சில பேரால்தான் முடியும். ஆனால் எனக்கு அது இயற்கைக்கு விரோதம். நீங்கள் தாளம் போடுவதினால் சௌகரியம் உண்டு என்று எனக்குத் தெரியும்.

SRI T. G. KRISHNAMOORTHI : மந்திரி அவர்களையே டாக்டர் ஸ்ரீனிவாசன் அவர்களின் பேச்சைப்பற்றிக் கவலைப்படவேண்டாம் என்று நான் சொல்லிக்கொண்டிருக்கும்போது நான் என் அவருடைய பேச்சுக்குக் கவலைப் படப்போகிறேன்.

DR. A. SREENIVASAN : யாரும் கவலைப்பட வேண்டாம்.

SRI T. G. KRISHNAMOORTHI : தமிழிலே பேசி ஆகவேண்டுமே என்று அநேகர் பிரசங்கம் நிகழ்த்தினார்கள். ஸ்ரீ மகமத் உஸ்மான் ஆங்கிலத்தில் பேசினார். ஸ்ரீ டி. எம். நாராயணசாமி பிள்ளை அவர்கள் தமிழில் பேசினார். சிறு சிறு இலக்கணப் பிழைகள் இருந்தாலும்கூட கூடுமான வரை தமிழிலேயே பேசி முடித்துவிட்டார். ஸ்ரீ புருஷோத்தம முதலியார் அவர்கள் பதங்கள் அவர்களுக்கு பழக்கம் இல்லாததால், ஆங்கிலத்திலேயே ஒரு தமிழ் பிரசங்கம் செய்து முடித்தார்.

சாதாரணமாக கோர்ட்டில் இருந்து சம்மன் வருகிறது. அந்த சம்மனிலே எழுதியிருப்பதைப் பார்த்தால் "ஆஜர்" போன்ற பல வார்த்தைகள் இருக்கும். அது தமிழில் எழுதப்பட்டதாக இருந்தாலும் கூட அந்தத் தமிழ் கொஞ்சம்கூட புரியாது. அம்மாதிரி தமிழிலேயே அ. நமூனு, ஆ. நமூனு என்று போட்டிருப்பார்கள். படித்தால் புரியாது; ஆங்கிலத்தில் சொன்னால்தான் புரியும். இந்தக் கஷ்டங்கள் இருக்கும்போது, தமிழ்பற்று என்ற காரணத்தினால் நாட்டுக்குத் தீங்கு வரும்படி செய்யக்கூடாது. ஸ்ரீ வி. வி. ராமசாமி நாடாரை எடுத்துக்கொள்ளுங்கள். அவருக்குப் பல ஆண்டுகளாகத் தமிழ் பற்று உண்டு. எந்த ஆங்கில வார்த்தைக்கும் தமிழ் பதங்கள் உபயோகிப்பவர்தான். ஆனால் அவர்கள் தன் பெயருக்கு முன்னால் V.V. என்ற ஆங்கில எழுத்துக்களைப் போடாமல் இருக்க முடியவில்லை. [ஸ்ரீ வி. வி. ராம்சாமி : இப்போது நான் வே. வ. ராமசாமி என்றுதான் போடுகிறேன்.] ஆங்கிலம் படிப்படியாகக் குறையும் என்று சர்க்கார் மசோதாவிலேயே கூறப்பட்டிருக்கிறது. நிதான மாகக் கொஞ்சம் கொஞ்சமாகக் கொண்டு சென்று, எல்லாவற்றையும் செய்து முடிப்பதாக மசோதாவில் காணப்படுகிறது. என்னைப் பொறுத்த வரையில் ஸ்ரீ மகமத் உஸ்மான் சொன்னபடி இது ஒரு சரித்திர முக்கியத்வம் வாய்ந்த மசோதாதான். டாக்டர் ஸ்ரீனிவாசன் அவர்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். காங்கிரசைப் பொருத்தவரை தேர்தல் செப்படி வித்தைகளைச் செய்யவேண்டிய அவசியம் இல்லை. காங்கிரஸ் தேர்தலில் நிற்கிறபோது தங்களுடைய சாதனைகளைச் சொல்லித்தான் ஓட்டுக் கேட்பார்களே ஒழிய தற்காலிகமாக எழாற்றி ஓட்டுக் கேட்கவேண்டிய அவசியம் இல்லை. தமிழ் ஆட்சி மொழி மசோதா வந்ததைப்பற்றி தமிழ் மக்களுக்கு ஒரு நம்பிக்கை உண்டாகியிருக்கிறது. ஆங்கிலம் படித்தவர்களால் இந்த மசோதா வரவில்லை. தமிழ் உணர்ச்சியினால் தமிழின் மீது உள்ள

விருப்பத்தினால், தமிழ் ஆட்சி ஏற்படவேண்டும் என்ற மக்களுடைய பலவந்தத்தினால் இந்த மசோதா வருகிறது. தமிழ் மக்களே இனிமேல் அவ்வளவு எளிதாக யாரும் ஏமாற்றிவிட முடியாது. தேர்தல் செப்படி வித்தைகளைக் கண்டு தமிழ் மக்கள் யாரும் ஏமாறமாட்டார்கள். ஆகையால் இந்த மசோதாவை நான் பூரணமாக ஆதரிக்கிறேன்.

MR. CHAIRMAN : There are five more hon. Members to speak and I allow one minute for each hon. Member.

*SRI N. ANNAMALAI PILLAI : கனம் தலைவர் அவர்களே, இன்றைய தினம் இந்த சபையின்முன் சமர்ப்பிக்கப் பட்டிருக்கும் தமிழ் ஆட்சிமொழி மசோதாவை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்பு கிறேன். இதில் உள்ள குற்றம் குறைகளைப்பற்றிப் பேசுவதற்கு நான் அருகதை உள்ளவன் அல்லன். தமிழை ஆட்சிமொழியாகக் கொண்டு வருவதற்குக் காரணமாய் இருந்த பல பெரியோர்களைப்பற்றி இந்த சமயத் தில் ஞாபகப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கு பல வருஷங்களுக்கு முன் ஆங்கிலேயர் சட்டசபை நடத்திய காலத்தில் ஸ்ரீ பி. வி. நரசிம்ம ஐயர் அவர்கள் சட்டசபையில் முதல் முதலாக தமிழிலேயே பேசுவதற்கு ஆரம்பித்த காலத்தில் சபையில் உள்ளவர்கள் அவரை ஏளனமாகப் பார்த்துக்கொண்டிருந் தார்கள். ஒருவர் பின் ஒருவராக பலபேர் வெளியேறியபோது சிலபேர் உள்ளிருந்தார்கள். அந்தக் காலத்தில் வெகு சிலர்தான் தமிழில் பேசு பவர்கள் இருந்தார்கள்.

" எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார் திண்ணியராகப் பெறின் " என்று நாயனார் சொல்லியிருக்கிறார். இதுபோல் எந்தக் காரியத்தையும் மனதில் உறுதியுடன் செய்தால் இன்று ஸ்ரீ பி. வி. நரசிம்ம ஐயர் வெற்றி கண்டது போல் எல்லோரும் வெற்றி காணலாம் என்பது திண்ணம். கனம் ராஜாஜி அவர்கள் இருந்த காலத்திலும் கூட தமிழ் நாடு சிறப்புறச் செய்ய வேண்டும் என்பதற்காக, தமிழர்களுக்கும், ஆந்திரர்களுக்கும் சென்னையைப் பற்றிய தகராறு ஏற்பட்ட காலத்தில், " சென்னை தமிழ் நாட்டைச் சேர்ந்தது " என்று அவர்கள் திடசித்தத்துடன் சொன்னார்கள். இப்போது சென்னை தமிழ் ஆட்சிமொழி மசோதா நமது முதல் மந்திரி பச்சைத்தமிழன் காமராஜர் அவர்கள் காலத்திலேயே—நான் சொல்லவில்லை, ஸ்ரீ ராமசாமி நாயக்கர் அவர்களே சொல்லுகிறார்கள் பச்சைத் தமிழன் என்று— கொண்டுவரப்பட்டு தமிழ் அரசியல் மொழியாக இயங்கப் போகிறது என் பதைக் கேட்டு நான் ஆனந்த பரவசமடைகிறேன். இந்த மசோதாவை கனம் ஸ்ரீ சுப்ரமணியம் அவர்கள் கொண்டுவந்தது எனக்கு இன்னும் அளவில்லாத ஆனந்தத்தை அளிக்கிறது. என்றுவது ஒரு நாள் இந்த லட்சியத்தை அடைந்தே தீருவோம் என்று அன்று பாரதி சொன்னான்.

" தமிழ்த்திருநாடு தன்னைப்பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா
அமிழ்தில் இனியதடி பாப்பா நம் ஆன்றோர்கள் தேசமடி பாப்பா "
என்றும்

" நீலத்திரைக்கடலோரத்திலே—நின்று
நித்தம் தவஞ்செய்யும் குமரி எல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே—புகழ்
மண்டிக்கிடக்கும் தமிழ்நாடு "

என்று பாரதி சொன்னான்.

இன்று அதை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு நமது முதல் மந்திரி கனம் ஸ்ரீ. காமராஜ் அவர்களுக்கு இருக்கிறது ; நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு கனம் மந்திரி ஸ்ரீ. சுப்ரமணியம் அவர்களுக்கு இருக்கிறது ; தமிழ் மக்கள் அத்தனை பேருக்கும் இருக்கிறது. நான் எதுவும் மிகைப்படுத்திப் பேசவில்லை.

வாழ்க தமிழ், தமிழ், தமிழ்! பாரதியார் சொன்னார்:

" செந்தமிழ் நாடென்னும் போதினிலே
இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே,
எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே
ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே "

அதே மாதிரி தமிழைப்பற்றியும் தமிழ் நாட்டைப்பற்றியும் பேசும்போது ஒரு சக்தி பிறக்குது என் மூச்சினிலே. அந்த சக்தியை என்னுல் அடக்க முடியாது. ஆதலால் அதிகம் பேச விரும்பாமல் இத்துடன் என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

Sri A. M. ALLAPICHAI: கனம் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நான் ரொம்பப் பேசுவதற்கு நேரம் இடையாது. ஆகையால் முக்கியமாக ஒரு வார்த்தை சொல்லிவிட்டு முடித்துக் கொள்கிறேன்.

உலகத்திலுள்ள மொழிகளிலேயே மிகச் சிறப்புற்றது நம் தமிழ் மொழி. தமிழில் மிகவும் சிறப்புற்ற இலக்கியங்கள் இருக்கின்றன. அவை சாதாரணமான இலக்கியங்கள் அல்ல. எறக்குறைய மூவாயிரம் வருஷங்களுக்கு முன்பே நம் தேசத்தில் சிறந்த இலக்கியங்கள் இருந்தன என்று சரித்திரங்களின் மூலம் நாம் தெரிந்துகொள்கிறோம்.

இந்த சமயத்தில் நான் ஒரு முக்கியமான விஷயத்தை அரசாங்கத்தாருக்கு எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். அது மிகவும் முக்கியமான விஷயம். அதாவது, நம் தமிழ் மொழி ரொம்ப அழகாக வளர வேண்டுமானுல் ஒரு மனப்பன்மை கொள்ளவேண்டும். அது என்ன மனப்பான்மை? அதாவது, இந்தத் தமிழ்மொழி ஒரு குறுகிய மொழி என்று நினைக்கக்கூடாது. தமிழ் மொழியை நாம் என்னவென்று கருத வேண்டும்? தமிழ் மொழியைக் கடலைப் போன்றதாக நாம் கருத வேண்டும். தமிழ் மொழியில் வந்து சேரக்கூடிய மற்ற பாஷைச் சொற்களை நதிகளைப் போல் நாம் கருத வேண்டும். நதிகள் கடலில் சேர்ந்தால் கடலுக்கு யாதொரு பங்கமும் உண்டாகாது, கடலுக்கு யாதொரு கெடுதியும் வராது; நதிகளுக்கும் கெடுதி உண்டாகாது. நதிகள் கடலில் சேருவதால் கடலுக்குப் பெருமையும் அழகும் உண்டாகும். ஆங்கில பாஷை ஸாஸர் காலத்தில் ரொம்பக் குறுகிய பாஷையாக இருந்தது. இன்று அது ரொம்பச் சிறந்த பாஷையாக இருக்கிறது. உலகத்திலுள்ள எந்த பாஷையிலிருந்து வரும் வார்த்தைகளையும் அந்த பாஷை எற்றுக்கொள்ளாமல் தடுத்ததில்லை. அந்த அந்த இடத்தில் மற்ற பாஷைகளிலிருந்து வரும் அழகான வார்த்தைகளையெல்லாம் தங்களுடைய வார்த்தைகளாகவே ஆங்கிலேயர்கள் எடுத்துக்கொண்டார்கள். ஆகையால் தமிழர்களாகிய நாமும் என்ன செய்ய வேண்டும்? அயல் பாஷைகளிலிருந்து வந்துள்ள எந்த எந்த அழகான வார்த்தைகளை நாம் உச்சரிக்க முடியுமோ அந்த வார்த்தைகளை நம் வார்த்தைகள் என்றே நாம் பாவிக்க வேண்டும். உதாரணமாக "மெடிகல்" என்ற ஆங்கில வார்த்தையை எடுத்துக் கொள்வோம். அது அழகான வார்த்தை. அதை நாம் மெ, டி, க, ல் என்ற எழுத்துக்களைக் கொண்டு தமிழில் அழகாக எழுத முடியும். அப்படிப்பட்ட வார்த்தைகளை நாம் தமிழில் எடுத்துக்கொள்ளலாம். அவற்றின் அர்த்தத்தை வேண்டுமானுல் தமிழில் (அகராதியில்) எழுதிவிடலாம். அழகாக உச்சரிக்கக் கூடிய அயல் வார்த்தைகளை தமிழ் வார்த்தைகள் என்றே நாம் கருத வேண்டும்.

இன்னெரு முக்கியமான விஷயம் சொல்ல விரும்புகிறேன். அதாவது, டிக்ஷனரிகளும் க்ளாசரிகளும் தயாரிப்பதற்குக் கமிட்டிகள் நியமிக்கும் போது ரொம்ப ஜாக்கிரதையாக அங்கத்தினர்களை நியமிக்கவேண்டும். அந்தக் கமிட்டிகளில் **lingvistic fanatics**-களை அதிகமாக நியமிக்கக்கூடாது. அவர்களை நியமித்தால் விஷயம் கெட்டுப்போகும்.

தமிழ் நன்றாக வளர வேண்டுமானுல் எல்லா பாஷைகளிலிருந்தும் வார்த்தைகளைத் தமிழில் எடுத்துக்கொள்ளவேண்டும். பழைய காலத்திலிருந்து தமிழர்கள் மலையாளம், தெலுங்கு ஆகிய பாஷைகளிலிருந்தும்

மற்ற பாஷைகளிலிருந்தும் வார்த்தைகளை எடுத்துக்கொண்டு வந்திருக்கிறார்கள். அதேமாதிரி இனிமேலும் மற்ற பாஷைகளிலிருந்து வார்த்தைகளை நாம் எடுத்துக்கொள்ளவேண்டும். நேரம் அதிகமாக இல்லாததால் இத்துடன் என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

12-10 p.m. SRI K. BALASUBRAMANYA AYYAR : மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, நான் இன்றையதினம் மகிழ்ச்சியின் காரணமாக அதிகமாகப் பேச இயலாது. அதை முதலில் வணக்கமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மகிழ்ச்சியில் எனக்கு ஒரு சின்னப் பொறுமையும் ஏற்பட்டிருக்கிறது. என்னுடைய நண்பர் கனம் கல்வி அமைச்சர் ஸ்ரீ. சுப்ரமணியம் இந்த மசோதாவைக் கொண்டுவந்து பெரும் பேரை அடித்துக் கொண்டு போகிறாரே என்றுதான் எனக்குக் கொஞ்சம் பொறுமை. அவர் செய்துள்ள இந்தக் காரியம் தேர்தல் சூழ்ச்சி அல்ல என்பதை நான் முக்கியமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (எதிர் கட்சியில் இருந்த போதிலும் இதை நான் சொல்கிறேன்.) நான் இப்படி என் சொல்கிறேன் என்றால், சட்ட மூலத்தில் எழுதியிருக்கும் முகவுரையில் என்ன சொல்லப் பட்டிருக்கிறது என்று கவனிப்போம். அதில் " தமிழை ஆட்சி மொழியாக்குவதற்கு மக்களின் பேராதரவு இருக்கிறது. சட்ட நிபுணர்களின் ஆதரவு முழுதும் இருக்கிறது. தமிழ் ஆட்சி மொழி ஆகவேண்டுமென்று மக்கள் வெகு காலமாக ஆசைப்படுகிறார்கள். " என்று சொல்லப்பட்டிருக்கிறது. நாட்டிலே எங்கு போனாலும் தமிழிலே பேசவேண்டும். அதுவும் இனிமையான தமிழிலேதான் பேசவேண்டும் என்ற ஆவல் மக்களுக்கு முழுவதும் இருக்கிறது என்பதை நான் நன்றாக அறிவேன். பல இடங்களுக்கு நான் செல்கிறபடியினாலே மக்களுடைய இந்த ஆவலை நான் தெரிந்து கொள்ள முடிகிறது.

ஐம்பது வருஷங்களுக்கு முன்னால் பாரதியார் அவர்கள்,

" யாமறிந்த மொழிகளிலே
தமிழ்மொழிபோல் இனிதாவது
எங்குங் காணோம் "

என்று சொல்லியிருக்கிறார். " யாமறிந்த மொழிகளிலே " என்று என் சொன்னார் ? அவருக்குப் பல மொழிகள் தெரியும். பல மொழிகள் தெரிந்த பெரியவரான பாரதியார், தான் அறிந்த மொழிகளிலெல்லாம் தமிழ் மொழி போல் இனிதாவதான மொழி எங்கும் கிடையாது என்று சொல்லியிருக்கிறார்.

நண்பர் ஸ்ரீ அண்ணாமலை பிள்ளை அவர்கள் பேசும்போது கூட,

" எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே
ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே "

என்ற பாரதியின் பாடலைக் குறிப்பிட்டு பேச்சை முடித்தார். " சக்தி " இருப்பதால் நான் இன்னும் சற்றுப்பேச விரும்புகிறேன். " சக்தி பிறக்குது " இந்தப் பேச்சிலே, தமிழ் பேச்சிலே.

" ஆங்கிலம் போல் அல்ல தமிழ் " என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அது ரொம்ப உண்மை. அதை முழுவதும் ஆதரிக்கிறேன். " Whan that Apprille Showers thoote " இதை யாராவது புரிந்து கொள்ள முடிந்ததா ? புரியவில்லை அல்லவா ? இதை நான் சாசரில் படித்திருக்கிறேன். இப்பொழுது பாருங்கள். " When that April with its showers sweet." இது எவ்வளவு நன்றாகப் புரிகிறது ? இன்றையதினம் சங்க நூல்களாகட்டும், வள்ளுவர் நூலாகட்டும், தேவாரம், திருவாசகம் ஆகட்டும், எந்தத் தமிழ் நூல்களை நாம் பார்த்தாலும் கூட, தமிழ் மொழி நன்றாக, அழகாக, மக்களுக்குப் புரியும்படியான முறையிலேதான் என்றைக்கும் இருக்கிறது. அந்த அழகான சொற்களை இப்பொழுது கையாளவேண்டுமென்று முக்கியமாக உங்களுக்குச் சொல்கிறேன். ரொம்ப அழகான சொல் நயம். சொல் நயம் என்றாலே எவ்வளவு நயமாக இருக்கிறது பாருங்கள். " நயம் " ஒரு அழகான சொல். " வார்த்தை " என்று சொல்வதுகூடத் தப்பு. " சொல் " என்றாலே அழகாக இருக்கிறது. தமிழிலே " சொற்கள் "

இல்லே என்று ஒரு அங்கத்தினர் குறிப்பிடும்போதும், தமிழ் மொழியி லுள்ள சொற்களேத் தெரியாமல் அவஸ்தைப்பட்டபோதும் நான் வருத்தப் பட்டேன். ஒரு அங்கத்தினர், "பாஷை" என்பதை "பாடை" என்று சொல்லி அவஸ்தைப்பட்டார். என் இந்த அவஸ்தை ? "மொழி" என்று சொல்லிவிட்டால் நன்முக இருக்கும். தமிழ் மொழியிலுள்ள எராளமான சொற்களே தாராளமாகக் கையாளவேண்டிய முக்கிய காலம் வந்துவிட்டது. இந்த சந்தர்ப்பத்தில் நான் ஒன்று மாத்திரம் சொல்ல விரும்புகிறேன். அதாவது, நாம் எல்லோரும் தமிழிலே நினைக்கவேண்டும்; ஆங்கிலத் திலே நினைத்து, பிறகு அதைத் தமிழிலே மொழிபெயர்க்கக் கூடாது.

SRI A. M. ALLAPICHAI : இன்னும் சில நாள் ஆகும்.

SRI K. BALASUBRAMANYA AYYAR : அதை நான் முழுவதும் மறுக்கிறேன். நாளைக்கே முடியும். ஏன் முடியாது ? நமது நாட்டில் தமிழில் நினைப்பதுதான் வழக்கம். "செந்தமிழும் நாப்பழக்கம்" என்பதுபோல தமிழிலேயே நினைக்க ஆரம்பித்தால், தமிழ் வெகு விரைவிலே பழக்கத் திற்கு வந்துவிடும். தமிழிலே நினைக்கவேண்டும். அவ்வளவுதான்.

இந்திய அரசியல் சட்டத்தின் 348–வது பிரிவிலே எல்லாவிதமான மசோதாக்களும், எல்லாவிதமான சட்டங்களும் ஆங்கிலத்தில்தான் இருக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பிறகுதான் அவை அந்தந்த மொழியில் மொழி பெயர்க்கப்படவேண்டும் என்ற முறையில் இருக்கிறது. தமிழிலே நிறைவேற்றினாலுங்கூட ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கவேண்டுமென்றும் அடுத்தபடியாக அதே பிரிவில் இருக்கிறது. அதற்கு நாம் என்ன செய்யவேண்டுமென்றால், தமிழிலே நினைக்கவேண்டும், தமிழிலேயே மசோதாக்களைத் தயாரிக்கவேண்டும். தமிழில் நினைத்து, தமிழில் செய்ததை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்க வேண்டும். அப்படிச் செய்யாமல், ஆங்கிலத்தில் எழுதிவிட்டு பிறகு அதைத் தமிழிலே மொழி பெயர்க்கிறார்கள். அதுதான் கூடாதென்று உங்கள் முன்பாக தெரிவித்துக்கொள்கிறேன். அமைச்சரவர்கள் இன்றையதினமே அப்படித் தீர்மானம் பண்ணிக்கொள்ளவேண்டும். தமிழிலே நினைத்து, தமிழிலே பேசவேண்டும். அப்படி இருக்கும் குழுக்களே அமைக்கவேண்டும், தமிழ்ச் சொற்களேயெல்லாம் நாம் கையாளவேண்டும். மொழிப் பிரச்னை யெல்லாம் பிற்பாடு யோசித்து நன்முகச் செய்யவேண்டுமென்ற உறுதி மொழியை பொன் மொழியாகச் சொன்னார்கள். அதைப்பற்றி பல விஷயங் கள் எனக்குத் தெரியும். சொல்லலாம். ஆனால், நான் அதைப்பற்றியெல்லாம் இப்பொழுது குறிப்பிடவில்லே. இந்தச் சபையின் அங்கத்தினர்களுடைய எண்ணிக்கையை 50 ஆக உயர்த்தியதைப்பற்றி என்னுடைய சந்தோஷத்தைத் தெரிவித்துக்கொண்டு இத்துடன் என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

*SRI M. ETHIRAJULU : அவைத்தலைவர் அவர்களே, இன்று, தமிழ் ஆட்சி மொழி விவாதத்தில் கலந்துகொள்ளும் பெருமை கிடைத்தது பற்றி பெருமகிழ்ச்சி அடைகிறேன். அன்று மந்திரி சபை அமைக்கக்கூடிய காலத்தில் பல எதிர்க்கட்சிகள், காங்கிரஸ் மந்திரி சபையை அமைக்க முடியாதபடி பல சூழ்ச்சிகளும், பல முயற்சிகளும் செய்து வந்தன. இருந்தாலும் அன்று காங்கிரஸ் மந்திரி சபையை அமைத்தது. அன்று காங்கிரஸ் மந்திரி சபை அமைப்பதற்கு எவ்வளவு கஷ்டங்கள் இருந்தனவோ அவ்வளவு கஷ்டங்கள் தமிழ் மொழியை ஆட்சி மொழியாகச் செய்வதிலும் இருந்தன; இன்றும் இருந்து வருகின்றன. காங்கிரஸ் மந்திரி சபை அமைப்பதற்கு அன்று இருந்த கஷ்டங்களே சமாளித்து, எதிர்த்தவர்களின் மனது புண்படும்படியாக பல சட்டங்களே காங்கிரஸ் அரசாங்கம் கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறது. அதைப்போல எத்தனையோ கஷ்டங்களுக் கிடையே இந்த ஆட்சி மொழி மசோதாவை அரசாங்கம் சபை முன் கொண்டுவந்திருக்கிறது. லட்சக்கணக்கான மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள்—எல்லாக் கட்சி அங்கத்தினர்களும்—ஒன்று சேர்ந்து இன்றைக்குத் தமிழை ஆட்சி மொழியாகக் கொண்டுவந்தது பற்றி காங்கிரஸ் கட்சியை நேற்றையதினம் கீழ் சபையில் ஏனளாவப் புகழ்ந்தார்கள்,

ஆனால் இந்த சபையில் ஒரு சில எதிர்ப்பு இருப்பதைப் பார்த்து நான் மிகவும் துயரடைகிறேன். எனென்றால், நல்ல படித்த பரம்பரையில் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் பரம்பரையிலே வந்திருக்கும் நமது கனம் நிதி அமைச்சர் அவர்கள், "இது மக்களுடைய ஆட்சியே தவிர ஒரு சில படித்தவர்களுக்காக ஏற்பட்ட ஆட்சி அல்ல" என்பதை நிரூபித்துக் காட்டி., சட்ட சபை அங்கத்தினர்களையெல்லாம், "நீங்கள் சந்தோஷத்துடன் செல்லுங்கள், சந்தோஷத்துடன் செல்லுங்கள்" என்று சொல்லுவதைப் போல் தட்டிக் கொடுத்ததின் பேரில், அங்கத்தினர்களும், "எங்களுக்குக் கட்சி பேதமே இல்லை, காங்கிரஸ் கட்சி தான் மக்களுக்கு இப்பேர்ப்பட்ட அரிய பெரிய காரியத்தைச் செய்தது." என்று அவர்கள் வீராவேசத்துடன் சொல்லக்கூடிய நிலைமையை உண்டுபண்ணிவிட்டார்". மேலும், இதைப் பார்க்கும் பாமரமக்கள், எழைத் தொழிலாளிகளெல்லோரும் காமராஜ் மந்திரி சபையைப் போற்றுகிறார்கள் என்றால், படித்தவர்களிட மிருந்து எத்தனை எதிர்ப்புகள் இருந்தபோதிலும் அஞ்சாநெஞ்ச முடைய அறிவுச் சுடர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் இதில் ஒரு சிறிதும் பின் வாங்காமல் இருக்கவேண்டும் என்று தமிழ்ப் பண்புள்ள நாங்கள் மிகப்பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

12-20 p.m. அது மட்டுமல்ல. நேற்றைய தினம் அங்கத்தினர்கள் எல்லோரும் திரு. காமராஜையும், திரு. சுப்பிரமணியத்தையும் வானளாவப் புகழ்ந்ததோடு அல்லாது சட்ட சபை காலம் முடிவதற்குள்ளேயே, சீக்கிரத்திலேயே இதற்கு ஒரு வரம்பு கட்டவேண்டுமென்று கீழ் சபை அங்கத்தினர்கள் நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டார்கள். அதைத் தான் சீக்கிரத்திலே செய்யவேண்டுமென்று நானும் கேட்டுக் கொள்கிறேன். பல லட்சக் கணக்கான மதிப்புள்ள ரூபாய்களைப் போட்டு ஆங்கிலத்தைக் கற்றுக் கொண்ட அன்பர்கள் இங்கு பேசினார்கள். அவர்களுக்கு வருங்காலத்தில் இனி மதிப்பு இல்லாமல் போய் விடுமே என்று அவர்கள் மனது மீண்டும் மீண்டும் துயரடைவதிலல் அவர்கள் தமிழை ஆட்சி மொழியாக ஆதரிக்க விரும்பவில்லை என்று அவர்கள் பேசியதிலிருந்து தெரிகிறது. இனிமேல் தமிழில் பேசினால் தான் தமிழ் மக்களுக்குப் பெருமை என்ற நிலைமையை இந்த ராஜ்யத்தில் எங்கும் பரப்ப வேண்டுமென்று தமிழ் அன்பர்களை கேட்டுக் கொள்ளுகிறேன், தமிழை ஆட்சி மொழியாகப் பிரகடனம் செய்த டிசம்பர் 27-ம் தேதியை ஒவ்வொரு ஆண்டும் மிகப் பிரமாதமாக ஒவ்வொரு வீட்டிலும் தமிழ் நாட்டில் கொண்டாட ஏற்பாடு செய்யவேண்டும், சுதந்திர தினத்தை நாம் எப்படிக் கொண்டாடுகிறோமோ அதைப் போல தமிழ் ஆட்சி மொழியான இந்த டிசம்பர் 27-ம் தேதியைத் தமிழ்த் திருநாளாக தமிழன் ஒவ்வொரு வீட்டிலும் சுதந்திரக் கொடியை ஏற்றிக் கொண்டாட சர்க்கார் செய்தே தீர வேண்டும். அதற்கான ஏற்பாட்டையும் உடனடியாக நிதி அமைச்சர் அவர்கள் செய்வாரென நம்புகிறேன்.

இங்கு பேசியவர்கள் எல்லோரும் தமிழ்ப் புலவர்கள் அல்ல; எல்லோரும் தமிழில் தேர்ச்சி பெற்றவர்கள் அல்ல, எதோ தமிழில் இப்படிப் பேசுகின்றோமே என்ற எண்ணம் இங்கு இருக்க வேண்டிய அவசியம் இல்லை, பேசப் பேச எல்லாம் சரியாக வந்து விடும்.

மகாகவி பாரதியார், திரு. வ. உ. சிதம்பரனார், திரு. வி. க. போன்றவர்கள் இன்று உயிருடன் இல்லை, இன்று தமிழ் ஆட்சி மொழியாவதை அவர்கள் பார்க்காமல் மறைந்து விட்டார்கள். ஆனால் அவர்கள் வெள்ளையர் ஆட்சிக்கு அடிமைப்பட்டுக் கிடந்த காலத்தில் தமிழுக்காக அரும் பாடுபட்டு இருக்கிறார்கள். 26 எழுத்துக்களைக் கொண்ட ஆங்கிலத்தை வைத்துக் கொண்டு நம்மை வெள்ளையர் 150 வருஷங்கள் அடிமைப்படுத்தி வைத்திருந்தார்கள். ஆனால், இன்று நம்முடைய 247 எழுத்துக்களைக் கொண்ட தமிழ் மொழி அரியாசனம் ஏறுகிறது. இன்றுதான் அந்தத் தமிழர்களின் ஆத்மாக்கள் சாந்தி அடைந்திருக்கும், இம்மாதிரி தமிழ் மொழி ஆட்சி மொழியாக ஏற்படவேண்டுமென்று பாடுபட்டு, அதற்காக உயிர் நீத்த பரம்பரையிலே வந்த ஸ்ரீ. சுப்பிரமணியம் அவர்கள் வாழ்க வாழ்க என்று கூறி என்னுடைய பேச்சை நிறுத்திக்கொள்ளுகிறேன்,

28th December 1956]

* SRI A. SUBRAMANYAM : அவைத் தலைவர் அவர்களே, பெரியோர்களே, இன்றைய தினம் நம்முடைய தமிழ் அன்னை அரியாசனத்தில் அமர்த்தப்படுகிறாள். அனைவரும் நல் வாழ்த்துக் கூறவேண்டுமென்று கனம் நிதி அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். வாஸ்தவம் தான். நானும் இதில் மட்டில்லா மகிழ்ச்சி அடைகிறேன், எத்தனையோ ஆண்டுகளாக நாம் அடிமைப்பட்டுக் கிடந்தோம். இன்று அல்லல் தீர்ந்தது. நல்ல காரியங்கள் பல நடக்கும்படியான ஒரு சூழ் நிலை இப்போது ஏற்பட்டு வருகிறது. இந்தப் பொன்னை நன்னாளில், இந்தத் திருநாளில், தமிழ்ப் பெருமக்கள் போற்றும்படியான புண்ணியமான இந்த தினத்திலே நம்முடைய ஆட்சி தமிழ் ஆட்சியாக நடைபெறுகிறது. இந்தத் தருணத்திலே நாம் நம்முடைய அன்னையை மனமார வாழ்த்துகின்றோம்.

இருந்தாலும் கூட, தமிழில் பேசும் போது சிலர் அதை நன்கு புரிந்து கொள்ளுமாறு செய்வது அரசாங்கத்தினுடைய கடமையும் பொறுப்புமாகும். என்னுடைய நண்பர் கனம் அங்கத்தினர் டாக்டர் ஸ்ரீனிவாசன் கூறியபோது, 'திருச்சியில் நடந்தது என்ன ஆயிற்று?' என்று கேட்டார். அவர் கேட்டதிலும் ஒரு விஷயம் இருக்கத்தான் செய்தது. திருச்சியில் தமிழ் ஆட்சி மொழி ஆன விதத்திலே பல தவறுதல்கள் ஏற்பட்டிருந்ததாகத் தெரிய வந்தது. அங்கே கரடு முரடான நிரடான தமிழை உபயோகித்தார்கள். அதனால் அங்குள்ள மக்களுக்கு தமிழ் சரியான முறையிலே புரியாத நிலைமை அங்கு ஏற்பட்டிருந்ததாகத் தகவல் கிடைத்தது. அந்த நிலைமை இனி நம்முடைய தமிழ் நாட்டிலே சட்டசபையிலே, கோர்ட்டுகளிலே, தாலுகா கச்சேரிகளிலே ஏற்படக் கூடாது. அதற்கு ஆக வேண்டியவைகளை நம்முடைய அரசாங்கத்தார் செய்யவேண்டும்.

பழக்கத்தில் ஊறிப் போன ஆங்கில வார்த்தைகளை அப்படியே தமிழிலும் வைத்துக் கொள்ளலாம். அதனால் தவறுதல் இடையாது 'சைக்கிள், மோட்டர், கலெக்டர்' போன்ற வார்த்தைகள் தமிழிலும் அப்படியே இருந்து விடலாம். 'ரயில்வே ஸ்டேஷன்' என்றால் மக்களுக்குச் சுலபமாகப் புரிந்து விடுகிறது. அதைத் தமிழில்தான் சொல்ல வேண்டும் என்பதற்காக 'புகை ஊர்து வண்டி நிலையம்', என்று மாற்ற வேண்டும்? வேண்டாம் என்று தான் நான் கூறுகிறேன், 'தாசில்தார், கஜானா, ஹுசூர் ஷீரஸ்ததார்' போன்ற உருது வார்த்தைகள் சகஜமாக இங்கு கையாளப்பட்டு வருகின்றன. வெகு நாளாகக் கையாளப்பட்டு வருகின்றன. அவைகளை எடுத்து விட்டு, அவைகளுக்குப் பதிலாக தமிழ் வார்த்தைகள்தான் இருக்கவேண்டும் என்று சொல்ல முடியுமா? அப்படியே மாற்றினாலும், மக்கள் அவைகளை எப்படிப் புரிந்து கொள்வது? வழக்கத்தில் இல்லாத புது வார்த்தைகளை விட வழக்கத்தில் ஊறிப்போன வார்த்தைகளை அப்படியே வைத்துக் கொள்ளுவது தமிழ் வளர்ச்சிக்கு நல்லது. பழைய காலத்தில் பல முசல்மான்கள் இந்தியாவுக்கு வந்ததில் உருது வார்த்தைகளும், ஆங்கிலேயர்கள் ஆண்டு வந்த காலத்தில் அநேக ஆங்கில வார்த்தைகளும் நம்முடைய மொழிகளில் புகுந்து விட்டன, பல வார்த்தைகள் ஒன்றரக் கலந்து விட்டன. அவைகளை மாற்றுவது என்பது கஷ்டம், 'சைகிள்' என்ற வார்த்தைக்கு பதில் 'சரிருளை வண்டி அல்லது துவிச் சக்கர வண்டி' என்று அழுத்தந்திருத்தமாகச் சொல்லி மக்களுடைய மனதைப் புண்படுத்த வேண்டாம். பெரிய பெரிய, கரடு முரடான, நிரடான வார்த்தைகளைவிட 'சைக்கிள்' என்ற ஒரு வார்த்தையே போதுமானது. 'இன்ஜினீரிங்' என்பதற்கு 'பொறி நுட்பம்' என்றும் 'மெடிகல்' என்பதற்கு, 'வைத்தியம்' என்றும் கூறிக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை. என்னுடைய கருத்து என்னவென்றால், வழக்கத்தில் இருந்துவரும் எந்த மொழிவார்த்தைகளாக இருந்தாலும் அவைகளை அப்படியே தமிழ் வார்த்தைகளாகவே கொண்டுவிடலாம் என்பது; அதற்கென்று தனித் தமிழ் வார்த்தைகளைக் கண்டுபிடித்து சிரமப்படவேண்டாம் என்பது.

கனம் அமைச்சர் அவர்கள் கூறும்போது இதைப் பற்றி இப்பொழுது நீண்ட விவாதம் வேண்டாமென்று கூறினர்கள். அதை நானும் ஒப்புக் கொள்கிறேன். தமிழ் ஆட்சியானது இனிமேல் நல்ல முறையிலே நடை பெறவேண்டும், அதற்கு எல்லோரும் ஆதரவு கொடுக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். அதை நான் ஒப்புக்கொள்கின்றேன். நம்முடைய கனம் திரு. காமராஜர் அவர் களுடைய ஆட்சியிலே, கனம் திரு. சுப்பிரமணியம் அவர்களுடைய பேச் சிலே, கனம் திரு. பக்தவத்சலம் அவர்களுடைய பதிலிலே, முதல் மந்திரியினுடைய மதியின் ஒரு நோக்கத்திலே நாம் எல்லோரும் தமிழர் களுடைய ஆட்சி என்றென்றைக்கும் நிலைத்த நிலையிலே வாழ வேண்டும், தமிழ் வளர வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்ளுகிறேன்.

* SRI G. KRISHNAMOORTHI : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் கல்வி மந்திரி அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த மசோதாவை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். நான் முதலில் நம்முடைய தேச பிதாவுக்கு அஞ்சலி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். நம் நாடு சுதந் திரம் அடையாவிட்டால் இந்த மசோதாவை நம்மால் கொண்டுவர முடியுமா என்பதை நாம் முதலில் சிந்திக்க வேண்டும். தமிழுக்காக உழைத்தவர் களைக் குறிப்பாக, பாரதியாரை நினைத்துப் பார்க்கவேண்டும். சென்ற 10 வருஷ காலம் சுதந்திரம் அனுபவித்தாலும்கூட இன்னும் பெரும்பாலோர், கிராமத்தில் இருப்பவர்கள், ஒதுக்கப்பட்டு வந்துள்ளதால், இந்த மசோதா வினால் அவர்களுக்கு நிவாரணம் ஏற்படும் என்று உணர்ந்துகொண்டு இந்த சர்க்காருக்கு நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். பெரும்பாலும் கிராமத்தில் இருக்கக்கூடிய ஜனங்கள் சர்க்காரிடமிருந்து ஏதாவது உத்தரவு வந்தால், அதைத் தெரிந்துகொள்வதற்காக அவர்கள் ஆங்கிலம் படித்தவர்களிடம் கொடுத்து அர்த்தம் கேட்பார்கள். அப்போது அவர்கள் தங்கள் மனதில் ஏதோ தாழ்ந்தவர்கள் என்று **inferiority complex** ஏற்படுகிறது. அப்படிப்பட்ட நிலைமை இந்த மசோதாவால் மாறிவிடும். எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய காலம் மிக மிகக் குறை வாக இருக்கிறபடியால் முக்கியமான ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்பு கிறேன்.

இம்மசோதாவின் பலனை உடனே எவ்வளவு நாம் விரும்பியபோதிலும் கூட இப்போது பள்ளிக்கூடங்களில் படிக்கும் குழந்தைகள் பூராவும் தமிழ் பாடங்கள் சரியாகக்கற்றுக்கொள்ள வசதி செய்தால்தான், அடுத்த தலைமுறை யிலாவது இப்போது கொண்டுவரப்பட்டிருக்கும் மசோதாவினுடைய முழுப் பலனை எதிர்பார்க்கலாம். ஆகவே இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக் கும் சர்க்காரும், முக்கியமாகக் கல்வி மந்திரி அவர்களும் "தமிழ் ஆசிரியர் கள்தான் இதற்கு அடிப்படை; அவர்களால்தான் தமிழில் உள்ள பதங்களை எடுத்துச் சொல்லுவதற்கோ, வேறு மொழியிலிருந்து தேவைப்படும் பதங் களை உபயோகிப்பதற்கோ, தமிழ் வளர்ச்சி அடைந்து ஆட்சி மொழியாக விளங்கச் செய்வதற்கோ, செய்ய முடியும்" என்பதை உணர்ந்தால், வருங் கால சந்ததிகளுக்கு இந்த மசோதா பூரண பலனைக் கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆகவே தமிழ் ஆசிரியர்கள்தான் இந்த மசோதாவின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு அடிப்படை என்பதை சர்க்கார் உணர்ந்து கொள்ள வேண்டும்.

தமிழ் டைப்ரைடிங், தமிழ் சுருக்கெழுத்துப் போன்ற துறைகளில் அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் துரிதமான நடவடிக்கை எடுத்துக்கொள் ளுவதோடு ஆசிரியர்களுக்குக் கருணைகாட்டியிருக்கும் இந்த சர்க்கார் அடுத்த நான்கு மாத காலத்திலேயே மேலும் ஆசிரியர்களுக்கு, முக்கியமாகத் தமிழ் ஆசிரியர்களுக்கு எவ்வளவோ செய்யலாம். ஆங்கிலம் படித்த ஆசிரியர்களுக்குக் கிடைக்கக்கூடிய சம்பளத்திற்குக் குறைவாக இல்லாமல் தமிழ் ஆசிரியர்களுக்கும் சம்பளம் கட்டாயம் கொடுக்க வேண்டும். இதற்கு இந்த சர்க்கார் வழி செய்வார்கள் என்ற பூரண நம்பிக்கையுடன் இந்த மசோதாவை வரவேற்கிறேன்.

28th December 1956]

MR. CHAIRMAN : The hon. Member Sri M. V. Sudarsanam Naidu will now speak. His will be the last speech on the Bill before the Hon. Minister replies to the debate.

* SRI M. V. SUDARSANAM NAIDU : கனம் தலைவர் அவர்களே, வணக்கம். இப்போது எனக்கு ஒரு ஞாபகம் வருகிறது. 1919-ம் ஆண்டிலே நமது காலஞ்சென்ற ஸ்ரீமான் சுப்ரமணிய பாரதியார் அவர்களைக் கடலூர் ஜெயிலிலிருந்து வரவேற்றோம். அப்பொழுதெல்லாம் கட்டுப்பாடுகள் அதிகம். 20, 30 ஆயிரம் ஜனங்கள் அவரை வரவேற்பதற்காகக் கூடியிருந்தார்கள். அம்மாதிரியான நிலைமையிலே பாரதியார் மேடை மீது ஏறி ஒரு உபன்யாசம் செய்தார். 'தமிழ் வாழ்க' என்று சொன்னார்கள். தமிழ் வாழ்க என்று சொல்லி விடுதலை என்று துவங்கும் தேசிய கீதத்தைப் பாட ஆரம்பித்தார்கள். நாட்டுக்கு விடுதலை எது என்று சொன்னால், தமிழ் மொழி என்றைக்கு ஆட்சி மொழியாக மாறுகிறதோ, அன்றைக்குத்தான் தமிழ் நாடு தமிழனுடையதாகிறது என்று சொல்லி, அதற்குத்தான் 'விடுதலை' என்று சொன்னார்கள். தமிழ் மொழி ஆட்சி மொழியாகவேண்டும் என்று அன்று பாரதி கண்ட கனவு இன்று நினைவாகிறது. அந்த சுப்ரமணியம் அன்று சொன்ன வார்த்தைகளை இன்று ஸ்ரீ சுப்ரமணியம் மசோதாவைக் கொண்டுவந்து சபையிலே நிறைவேற்றும் ஒரு பாக்கியத்தைப் பெற்றதற்காக நான் அளவில்லா சந்தோஷம் அடைகிறேன். அன்று சுப்ரமணிய பாரதியார் சொன்ன வார்த்தைகள் இன்று ஸ்ரீ சுப்ரமணியம் வார்த்தைகளில் பிரதிபலிக்கின்றன. பெரியவர்கள் எந்த நல்ல நோக்கத்தைத் தங்கள் கண்களால் ஊடுருவிப் பாயச் செய்தார்களோ, அது கட்டாயம் ஈடேறிப் பயன் தரும் என்பதற்கு இது ஒரு சான்று. நமது முதல் மந்திரி தலைமையிலே இருக்கும்போது தமிழ் ஆட்சி மொழியாக வேண்டுமென்று எடுத்துக்கொண்ட ஒரு கைங்கரியத்தை வரவேற்கிறோம் என்பதில் யாதொரு சந்தேகமும் இல்லை.

நாடு முன்னேற்றம் அடைந்துவிட்டது. ஒரு சின்ன உதாரணம். நாங்கள் சிறு வயதிலே திண்ணைப் பள்ளிக்கூடத்திலே வாசிக்கும்போது, அந்தக் காலத்திலே உள்ளவர்களுக்கு ஆங்கிலம் படித்தவர்களைக் கண்டால் பல காரணங்களைக் கொண்டு ஒரு விதமான அருவருப்பும் அசூயையும் ஏற்பட்டன. மகாத்மாஜி அவர்கள் லட்சக்கணக்கான மக்களிடத்திலே பேசும் போதெல்லாம் ஆங்கில மொழியின் மீது அவ்வளவு வெறுப்பை ஏற்படுத்தி விட்டார்கள். அவர்களுடைய பிரசங்கங்களையும், எண்ணங்களையும் அந்த முறையில் அமைத்திருந்தார்கள். சென்ற 36 வருஷ காலமாக அப்படிப்பட்ட எண்ணத்திலேயே ஊறிவந்திருக்கும் நாங்கள், ஆங்கிலம் மறைய வேண்டும் என்று சொல்லிக்கொண்டு வந்த எங்களைப் போன்றவர்கள், இந்த மசோதாவை மனப்பூர்வமாக வரவேற்கிறோம். நாங்கள் எவ்வளவோ இதற்காகப் பாடுபட்டதின் காரணமாகத்தான் இதை ஆதரித்துப் பேசுகிறோம். 50 அங்கத்தினர்கள் கொண்ட இந்த சபையில் எல்லோரும் அதை ஆவலுடன் வரவேற்கும்போது, ஒரு சிலர் கூட இதை எதிர்க்கத் தான் செய்கிறார்கள். அவர்களைப்பற்றி நமக்கு அக்கறை இல்லை. நான் மிக அதிகமாகக் கோருவதாக நினைக்கக்கூடாது. தமிழ் ஆட்சி மொழியாக வேண்டும் என்று சென்ற 36 ஆண்டு காலமாக நாங்கள் எண்ணிய எண்ணம் இன்று ஈடேறுகிறது. அதற்குக் குறுக்கே யார் எதைச் சொன்னாலும் அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளமுடியாது. ஆகவேதான் என்னை இம்மாதிரிப் பேசுவதற்கு உந்துகிறது. தமிழை ஆட்சி மொழியாகக் கொண்டு வந்த ஆட்சியாளர்களுக்கு என் மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவித்துக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகிறேன். 12-30 p.m.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் தலைவர் அவர்களே, இந்த மசோதாவிற்கு ஒருமித்த ஆதரவு கொடுத்த எல்லோருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். உள் நோக்கம் காட்டினாலும் மசோதாவை ஆதரித்ததற்காக கனம் அங்கத்தினர் டாக்டர் ஸ்ரீனிவாசன் அவர்களுக்கும் என்னுடைய நன்றி.

[Sri C. Subramaniam] [28th December 1956

நாம் வாழ்கின்ற இந்தக் காலம் சரித்திரப் பிரசித்தி பெற்ற காலம். இந்தக் காலத்தில் வாழக் கூடிய ஒரு பேறு கிடைத்தது பற்றி நாம் எல்லோரும் பெருமைப்பட வேண்டும். மாகாத்மாஜி அவர்கள் வாழ்ந்து, இந்தியாவின் சுதந்திரத்திற்காக இயக்கம் நடத்திய காலத்தில் நாம் வாழ்ந்தோம்; அதுபற்றி நாம் பெருமை கொள்ளலாம். அந்த இயக்கம் வெற்றியடைந்து நாம் சுதந்திரம் பெற்றோம்; அந்த நாளில் வாழ்ந்தோம் என்று பெருமை கொள்ளலாம். அதற்குப் பிறகு, நமக்கு ஒரு அரசியலமைப்பு வேண்டுமென்பதற்காக அரசியல் சட்டத்தை இயற்றி அதை பிரகடனம் செய்தோம்; அந்தக் காலத்தில் வாழ்ந்தோம் என்று பெருமை கொள்ளலாம். இவ்வளவிற்கும் மேலாக, நம்மைப் பொறுத்தவரையில் இன்றைக்குத் தமிழ் மொழி ஆட்சி மொழி ஆகிறது என்பது குறித்து இன்னும் அதிகமாகப் பெருமைப்படலாம் என்பதே என்னுடைய கருத்து.

நாம் தமிழை இப்போது ஆட்சி மொழியாக ஆக்க முற்படுவது தேர்தல் சமயத்தில் செய்யும் சூழ்ச்சி என்று கனம் அங்கத்தினர் டாக்டர் ஸ்ரீனிவாசன் அவர்களுக்கு மனதில் படுகிறது. தமிழில் 'காமாலைக் கண்ணனுக்கு கண்டது எல்லாம் மஞ்சளாகத் தெரியும்' என்று ஒரு பழமொழி உண்டு. அதேபோல் தேர்தலில் சூழ்ச்சி செய்யவேண்டிய அவசியம் உள்ளவர்களுக்கு வேறு எதைப் பார்த்தாலும் அது தேர்தல் சூழ்ச்சியோ என்று சந்தேகம் எற்படலாம். தமிழை ஆட்சி மொழியாக்கும் இந்தக் காரியத்தை தேர்தலுக்காக என்று ஒரு குறுகிய நோக்கத்தோடு நாங்கள் செய்யவில்லை. உண்மையான தமிழ் அன்பர்கள் எல்லோரும் இதை வரவேற்பார்கள். இதில் குற்றம் காணும் மனப்பான்மை அவர்களுக்கு இருக்காது என்றே நான் நம்புகிறேன்.

அரிய பெரிய கருத்துக்களைப் பல அங்கத்தினர்கள் எடுத்துச் சொன்னார்கள். 'இதுவரை சிறையில் அடைக்கப்பட்டிருந்த தமிழ் அன்னை விடுதலை பெற்று விட்டாள்,' என்று ஒரு அங்கத்தினர் கூறினர். அதன் தத்துவம் என்ன என்று பார்ப்போம். மற்றவர்களுடன் தொடர்பு இல்லாதபடி இதுவரை தமிழ் அன்னை ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தாள். இது வரை தமிழை மற்றவர்கள் சிறையில் அடைத்திருக்கலாம். ஆனால் நம்மை நாமே சிறையில் அடைத்துக்கொள்ளக் கூடாது. வெளியிலிருந்து மற்றொருவர் கதவைப் பூட்டினாலும் சரி, அல்லது நாமே உள்ளேயிருந்துகொண்டு கதவைப் பூட்டி சாவியை ஜேபியில் போட்டுக்கொண்டாலும் சரி, இரண்டு விதத்திலும் நாம் இருக்கும் இடம் சிறையாகத்தான் இருக்கும் என்று சொல்லிக்கொள்ளுகிறேன். விடுதலை என்பது தாராளமாக எல்லோருடனும் கூடித் தொடர்பு கொள்வதுதான். நம்மை நாமே சிறையில் அடைத்துக்கொள்ளக்கூடாது.

அடுத்தபடியாக தமிழிடம் அன்பு செலுத்த வேண்டும் என்று சொல்லும் போது, மற்ற மொழிகளின் மீது வெறுப்பு ஏற்படும்போதுதான் தமிழிடம் அன்பு ஏற்படும் என்று கருதுவது தவறு என்று சொல்லிக் கொள்ளுகிறேன். அந்தத் தத்துவத்திற்கு அவசியமும் கிடையாது, ஆதாரமும் கிடையாது. ஒருவனுக்கு நண்பனாக இருக்க வேண்டுமென்றால் இன்னொருவனுக்குப் பகைவனாக இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. ஆனால், தமிழிடத்தில் அன்பு செலுத்துகிறோமென்றால் நமக்கு மற்ற மொழிகளிடத்திலும் போதிய பற்றுதலும் மரியாதையும் இருக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மற்றவர்களுக்கு உரிய மரியாதையையும் அன்பையும் செலுத்திக்கொண்டு நமக்கு உரியவர்களுக்கும் மரியாதையையும் அன்பையும் செலுத்துவதுதான் உண்மையான மரியாதையும் அன்பும் ஆகும். ஆகையால், தமிழை ஆட்சி மொழியாக அரியாசனத்தில் அமர்த்தும்போது, மற்ற மொழிகளைப் புறக்கணிக்காமல் தமிழுக்கு உதவக் கூடிய எல்லா மொழிகளுக்கும் பூரண ஆதரவு கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அந்த அந்த இடங்களில் அவைகள் இடம் பெறும் என்பதையும் நாம் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். அதுதான் நாம் முக்கியமாக மனதில் வைத்துக்கொள்ளவேண்டிய

28th December 1956] [Sri C. Subramniam]

கருத்து. ஆகவே தமிழ் ஆட்சி மொழியாக ஆகும்போது மற்றப் பரிவாரங்களும் சூழ நாம் ஆட்சி நடத்த வேண்டுமே தவிர, மற்றெல்லாவற்றையும் ஒதுக்கிவிட வேண்டுமென்று விரும்புவது தவறு.

இந்த மசோதாவை ஏகமனதாக நிறைவேற்றுவதற்காக என்னுடைய மகிழ்ச்சியையும் பெருமிதத்தையும் தெரிவித்துக்கொண்டு எல்லோருக்கும் என் நன்றியையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

MR. CHAIRMAN : The question is —

" That the Madras Official Language Bill, 1956 (L.A. Bill No. 46 of 1956), as passed by the Legislative Assembly, be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 to 6 were put and carried.

Clause 1 was put and carried.

The Preamble was put and carried.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் தலைவர் அவர்களே, இந்த மசோதாவைச் சட்டமாக்க வேண்டுமென்று நான் பிரேரேபிக்கிறேன்.

MR. CHAIRMAN : Motion moved—

" That the Madras Official Language Bill, 1956 (L.A. Bill No. 46 of 1956), as passed by the Legislative Assembly, be passed."

SRI T. PURUSHOTHAM : தலைவர் அவர்களே, நான் ஒரே ஒரு வார்த்தை சொல்ல வேண்டியிருக்கிறது. இப்போது தமிழ் ஆட்சி மொழி மசோதாவை நிறைவேற்றியிருப்பதால் ஆங்கிலம் படித்த சர்க்கார் சிப்பந்திகளை எல்லாம் வேலையிலிருந்து எடுத்துவிடுவார்களோ என்று ஒருவித மான பரபரப்பு உத்தியோகஸ்தர்களிடையே ஏற்பட்டிருக்கிறது என்று நான் வெளியே சென்றபோது பலர் சொன்னார்கள். அப்படி ஒருவிதமான நிகழ்ச்சியும் ஏற்படாது என்றுதான் நான் நினைக்கிறேன். சபையில் பெரும் பாலும் எல்லோரும் தமிழில் பேசுவதனால் ஆங்கிலத்தில் பயிற்சி பெற்ற சுருக்கெழுத்தாளர்கள், ரிப்போர்ட்டர்கள், இவர்களையெல்லாம் உத்தியோகத்திலிருந்து எடுத்துவிடுவார்களோ என்று அவர்கள் நினைப்பதாகக் கேள்விப்பட்டேன். அப்படியெல்லாம் ஒருவரையும் அரசாங்கத்தார் எடுத்து விட மாட்டார்கள் என்று உறுதிமொழி கூறுவதற்காகத்தான் ஒரு வார்த்தை சொல்ல வேண்டுமென்று நான் நினைத்தேன். ஆங்கிலத்தில் பயிற்சி பெற்றிருந்தாலும், எந்த பாஷையில் பயிற்சி பெற்றிருந்தாலும் இப்போது இருக்கும் உத்தியோகஸ்தர்களை அரசாங்கத்தார் எடுத்துவிட மாட்டார்கள் என்றுதான் நான் நினைக்கிறேன். அல்லது அவர்களுக்குத் தமிழில் பயிற்சி வேண்டுமானால் தமிழ் சுருக்கெழுத்திலும் தமிழ் டைப் ரைடிங்கிலும் அவர்களுக்குப் பயிற்சி கொடுப்பார்களே தவிர இப்போது இருக்கும் உத்தியோகஸ்தர்களை வேலையிலிருந்து எடுத்துவிட மாட்டார்கள் என்று தெரிவித்துக்கொண்டு, கனம் அமைச்சர் அவர்களை இந்த மசோதாவைக் கொண்டு வந்ததற்காக நான் மறுபடியும் சபையின் சார்பாகப் பாராட்டுகிறேன். 12-40 p.m.

[28th December 1956

MR. CHAIRMAN : The question is—

"That the Madras Official Language Bill, 1956 (L.A. Bill No. 46 of 1956), as passed by the Legislative Assembly, be passed."

The motion was put and carried and the Bill was passed unanimously.

(2) THE MADRAS DISTRICT COLLECTORS' POWERS (DELEGATION) BILL, 1956 (L.A. BILL NO. 40 OF 1956.)

*THE HON. SRI M. A. MANICKAVELU : தலைவர் ஐயா, இப்போது நான் கீழ்ச் சட்டசபையில் நிறைவேற்றபபட்ட "Bill" to provide for the delegation of the powers of District Collectors to their Personal Assistants in the State of Madras" [a] ஐ இந்த மேல் சபையின் கவனதத்திற்கும் விவாதத்திற்கும் கொண்டு வருகிறேன். இப்போது நிறைவேற்றபபட்ட மசோதாவை விவாதத்தில் கலந்து கொள்வதறகு எனக்கு சந்தர்ப்பம் இல்லாமல் போய்விட்டது. ஆனலும, பேச்சளவில் மட்டுமினறி காரியாம்சத்திலும் அந்த மசோதாவின தாத்பர்யத்தைக் கடைப்பிடிக்கும் முறையில் இந்த மசோதாவை நான் தமிழிலேயே பிரேரேபித்திருக்கிறேன்.

MR. CHAIRMAN : Motion moved—

"That the Madras District Collectors' Powers (Delegation) Bill, 1956 (L.A. Bill No. 40 of 1956), as passed by the Legislative Assembly, be taken into consideration."

* SRI T. PURUSHOTHAM : This Bill deals with one of the important recommendations of the District Revenue Administration Enquiry Committee, viz., delegation of some powers of the Collectors to their Personal Assistants. Even now the Collectors have delegated some of their routine powers to their Personal Assistants and even important questions and questions involving principles and policies have been delegated to the Personal Assistants in some cases. There is no uniformity in this matter. There is considerable difference in the allocation of work between Collectors and their Personal Assistants from district to district. It is my fond hope that in the notifications to be issued under this legislation, the Government should follow definite principles in accordance with the findings of the District Revenue Administration Enquiry Committee. In this connection, Sir, when we provide for delegation of powers of the Collectors to their Personal Assistants consequent on increased work in the districts, I should like to point out that the question of unwieldy size of some of the revenue districts deserves to be given some consideration so that we can have a convenient re-adjustment of the size of the districts. The District Revenue Administration Enquiry Committee has also referred to this question; the formation of a new district for Pudukkottai by adding adjoining territories has also been referred to by that Committee. I hope these aspects of readjusting the size of the districts will be taken into consideration soon.

[a] Printed as Appendix IV on pages 435–436 infra.